# இலங்கைமொறட்டுவைபல்கலைக்கழகத்தின்
# தொழினுட்பநிறுவனம்

## வருடாந்தஅறிக்கையும்
## வருடாந்தகணக்குகளும்
## 2013

இந்தவருடாந்தஅறிக்கையானது 2014.12.19ஆந் திகதியன்றுநடாத்தப்பட்ட இந்தநிறுவகத்தின் முகாமைத்துவச் சபையினால் அதன் 169வது கூட்டத்தில் அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

# உள்ளடக்கம்


| | | பக்கம் |
|---|---|---|
| 1. | தொலைநோக்குக் கூற்று | 1 |
| 2. | செயற்பணிக் கூற்று | 1 |
| 3. | பணிப்பாளரின் மீளாய்வு | 1 |
| 4. | வளங்களினதும் மாணவர்களின் விவரங்கள் | 4 |
| 5. | உள்நாட்டுமாணவர்களின் விவரங்கள் | 8 |
| 6. | வெளிநாட்டுமாணவர்களின் விவரங்கள் | 9 |
| 7. | கல்வித்துறைப் பதவியினர்களின் விவரங்கள் | 9 |
| 8. | கல்விசாராபதவியினர்களின் விவரங்கள் | 10 |
| 9. | ஆராய்ச்சி,புத்தாக்கம் மற்றும் வெளியீடுகளின் விவரங்கள் | 12 |
| 10. | நிகழ்ச்சித்திட்டங்கள்,கருத்தரங்குகள் மற்றும் வேலைகள் ஆகியவற்றின் விவரங்கள் | 13 |
| 11. | பெற்றுக்கொள்ளப்பட்டஅளிப்புகளின் விவரங்கள் | 14 |
| 12. | ஆரம்பிக்கப்பட்டுள்ளபுதியகல்விநெறிகளின் விவரங்கள் | 14 |
| 13. | மீண்டுவருஞ் செலவினத்தின் விவரங்கள் | 14 |
| 14. | மூலதனச் செலவினத்தின் விவரங்கள் | 14 |
| 15. | கருத்திட்டங்களின் விவரங்கள் (உள்நாட்டினால் /வெளிநாட்டினால் நிதியளிக்கப்பட்டவை) | 15 |
| 16. | கருத்திட்டச் செலவினத்தின் விவரங்கள் (உள்நாட்டினால் /வெளிநாட்டினால் நிதியளிக்கப்பட்டவை) | 15 |
| 17. | நிதிமுன்னேற்றத்தின் விவரங்கள் (செலவினம்) | 15 |
| 18. | நிதிமுன்னேற்றத்தின் விவரங்கள் (பிறப்பிக்கப்பட்டவருமானம்) | 16 |
| 19. | நிதிச்செயலாற்றுகைபகுப்பாய்வு– 2013 | 16 |
| 20. | 2013ஆம் ஆண்டில் பெற்றுக்கொள்ளப்பட்டஉட்கட்டமைப்பு வசதிகளின் விவரங்கள் | 16 |
| 21. | ஏதேனும் பிறவிவரங்கள் / இந்தஅறிக்கைக்கு இயைபுள்ள செயலாற்றுகை | 16 |
| 22. | கணக்காய்வுசெய்யப்பட்டநிதிக்கூற்றுகள் - 2013 | 17 |
| 23. | கணக்காய்வுக்குழுஅறிக்கை | 21 |
| 24. | கணக்காய்வாரள் நாயகத்தின் அறிக்கை | 22 |
| 25. | கணக்காய்வாரள் நாயகத்தின் அறிக்கைக்கானபதில் | 31 |

# <u>தொழினுட்ப நிறுவகம் - மொறட்டுவை பல்கலைக்கழகம்</u>

## 1. தொலைநோக்குக் கூற்று

தொழினுட்பக்கல்வியில் அதிசிறந்த நிலையமாகவிருப்பதற்கு

## 2. செயற்பணிக் கூற்று

**செயற்பணி**

இப்பிராந்தியத்தில் சுறுசுறுப்பான தொழினுட்ப நிறுவகமாயிருந்து இலங்கையின் சமூகத்தின் கல்வி, பொருளாதார, சமூக முன்னேற்றத்திற்கு பின்வருவனவற்றை வழங்குவதன் மூலம் தீவிரமான பங்களிப்பை வழங்குதல்:-

- சமூகத்தினதும் கைத்தொழிலினதும் தேவைகளை எதிர்நோக்குவதற்கு அணுகத்தக்கதும் நெகிழ்வுத்தன்மையுடையதும் வினைத்திறமையுடையதுமான தொழினுட்பக்கல்வியையும் தேர்ச்சிகளையும் வழங்குதல்.

- புத்தாக்கத்திற்கும் உருவாக்கத்திற்குமான சுற்றாடல் ஒன்றை வழங்குதல்.

- கைத்தொழில்,வியாபாரம் ஆகியவற்றுடன் சுறுசுறுப்பான உடனுழைப்பையும் சமூக வாழ்க்கைத் தொழில் வாய்ப்புக்களை வகுத்தமைத்தல்.

- இளைஞர்களுக்கு சமூக மற்றும் பொருளாதார மார்க்கங்களையும் வாய்ப்புக்களையும் அதிகரித்தல்.

## 3. பணிப்பாளரின் மீளாய்வு

### *அ) சுருக்கமானமுன்னுரை*

மொறட்டுவைப் பல்கலைக்கழகத்தின் தொழினுட்பவியல் நிறுவனமானது தேசிய ரீதியாகவும் சர்வதேச ரீதியாகவும் நன்கு அங்கீகரிக்கப்பட்டுள்ள தொழினுட்பவியலில் தேசிய டிப்புளோமா கற்கை(தே.டி.தொ)நிகழ்ச்சித் திட்டத்தை நடாத்துவதற்கு முதனிலையாகப் பொறுப்பாகவுள்ள முதனிலை உயர்கல்வி நிறுவகமாகும்.

2013 என்பது இந்த நிறுவகம் ஆரம்பிக்கப்பட்டதிலிருந்து 13வது ஆண்டாக விளங்குகின்றது. தனது செயற்பாடுகளை நடாத்துவதில் இந்த நிறுவகமானது தொடர்ந்தும் அநேக கஷ்டங்களை அது தனது சொந்த பௌதீக வசதிகளை கொண்டதாகவிராததன் மொறட்டுவைப் பல்கலைக்கழகத்தின் வசதிகளின் பகிர்வின் மீது தங்கியிருக்கும் கட்டாய நிலைக்கு தள்ளப்பட்ட போதிலும் அது விவேகத்தின் மீளாய்வாண்டில் எதிர்பார்க்கப்பட்ட தனது தேசிய சேவையைத் தொடர்ந்தும் நிறைவேற்றிக்கொண்டிருந்தது.

## ஆ) *சாதனைகள்*

இந்த நிறுவகத்தின் கல்விச் செயற்பாடுகள் பி.எஸ்.ஸி (டீ.ளுஉ) மாணவர்களின் தொகுதிக்கும்(ேனு.வு)மாணவர்கள் (தேசிய டிப்புளோமா தொழினுட்ப) தொகுதிக்குமிடையே இடம் பெற்ற மாணவர்களின் மோதல்கள் காரணமாக தாமதமாக்கப்பட்ட போதிலும் கல்வி அட்டவணைகளின் பிரகாரம் நடாத்தப்பட்டன. இந்நிறுவகத்தில் ஒன்பது கல்வி நெறித்துறைகளில் அதாவது பெயரளவில் இரசாயன, புடைவை, பொலிமர், சிவில், மின்சார, இலக்ரோனிக் (மின்னியல்), கடல்சார், பொறிமுறை, கப்பற்துறை, வழிமுறைப்படுத்தல் நிகழ்ச்சித்திட்டம் ஆகிய கல்வித்துறைகளில் கல்வி கற்பதற்கு 350 மாணவர்கள் அனுமதிக்கப்பட்டனர்.

புதிய மாணவர்களுக்கு வழிமுறைப்படுத்தல் நிகழ்ச்சித்திட்டம் வெற்றிகரமாக நடாத்தப்பட்டது. சகல மூன்றாவது ஆண்டு மாணவர்களுக்குமான கைத்தொழில் பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் தேசிய பயிலுநர், கைத்தொழில் பயிற்சி அதிகாரசபையின் உடனுடைழப்புடன் திட்டமிட்ட விதத்தில் நடாத்தப்பட்டது.

மீளாய்வாண்டில் எய்தப்பட்ட குற்பிடத்தக்கவொரு சாதனை என்னவெனில் இந்த நிறுவகத்தின் மீள் அமைவிடம் அமைப்பதற்கும் அபிவிருத்தி செய்வதற்கும் தீவிர கவனம் செலுத்தப்பட்ட நீண்ட காலமாக முன்மொழிவு செய்யப்பட்ட கருத்திட்டத்தில் அடையப்பெற்ற முன்னேற்றமாகவுள்ளது. இக்கருத்திட்டத்தை நிறைவேற்றுவதற்கு சீனதேசிய விமான தொழினுட்பவியல் இறக்குமதி, ஏற்றுமதிக் கூட்டுத்தாபனத்துடன் ஒப்பந்தமொன்றைச் செய்வதற்கு உயர்கல்வி அமைச்சிற்கு அமைச்சரவையினால் வழங்கப்பட்ட அங்கீகாரத்துடன் உயர்கல்வி அமைச்சிற்கும் சீன தேசிய விமான தொழினுட்பவியல் இறக்குமதி, ஏற்றுமதிக் கூட்டுத்தாபனத்திற்குமிடையே ஒப்பந்தமொன்று செய்யப்பட்டது. சீனமக்கள் குடியரசின் அரசாங்க முகவர் நிலையங்களும் இலங்கையின் வெளிநாட்டு வளங்கள், திணைக்களமும் 2013ஆம் ஆண்டில் இக்கருத்திட்டத்தின் நிதியளித்தல் ஒப்பந்தத்தை பூர்த்தி செய்வதில் தொடர்ந்தும் ஈடுபட்டுக்கொண்டிருந்தன.

இக்கருத்திட்டம் சம்பந்தப்பட்ட செயற்பாடுகளை வைபவரீதியாக ஆரம்பிப்பதன் பொருட்டு உத்தேசிக்கப்பட்ட மொறட்டுவ பல்கலைக்கழகத்தின் தொழினுட்ப நிறுவகத்தின் அமைவிடத்தில் அத்திவாரக்கல் நாட்டப்பட்டது.

## இ) *தவறுதலும் நியாயப்படுத்துகையும்*

2000ஆம் ஆண்டில் நிறுவப்பட்டதுடன் மொறட்டுவ பல்கலைக்கழகத்தின் தகவல் தொழினுட்ப நிறுவகமானது அளவுரீதியாகவும் தரரீதியாகவும் தனது அபிவிருத்தியை தடைசெய்த அநேக புறக்கட்டுப்பாடுகளை எதிர்நோக்கியுள்ளது. சில தசாப்தங்களாக 350 மாணவர்களாகவிருந்த மாணவர்களின் அனுமதியானது பிரதான பல்கலைக்கழகத்துடனான பகிர்வு வசதிகளில் விதிக்கப்பட்ட மட்டுப்பாடுகளின் காரணமாக 2013ஆம் ஆண்டிலும் கூட அதே நிலையில் இருந்தது. இதே காரணத்தின் நிமித்தம் பாடத்திட்டத்தின் திருத்தத்துடன் கண்டறியப்பட்ட கல்விசார் தரமுயர்த்தலை முழுமையான நடைமுறைப்படுத்துவதில் இந்நிறுவகத்தின் ஆசிரியர்களும் மாணவர்களும் கஷ்டத்தை எதிர்நோக்கியுள்ளனர். முன்னோடியாக கருதப்பட்ட இந்நிறுவகத்டதின் மீள்அமைவிடமும் அபிவிருத்தியுமே இந்த நீண்டகால குறைபாட்டிற்கான மிகவும் விரும்பத்தக்கதும் நடைமுறைப்படுத்தத்தக்குமான தீர்வாகும். மீளமைவிடம் அமைப்பதற்கான இக்கருத்திட்டத்தின்

பௌதிகசெயற்பாடுகளை ஆரம்பிப்பதில் எதிர்பாராத தாமதமொன்று உள்ளபோதிலும் இந்த இலக்கை எய்துவதில் இந்நிறுவனமானது சரியான பாதையில் சென்றுகொண்டிருக்கின்றது.

### *ஈ) எதிர்காலத்திட்டம்*

இந்நிறுவகத்தின் எதிர்காலத்திட்டங்கள் "மொறட்டுவ பல்கலைக்கழகத்தின் தொழினுட்ப நிறுவகத்தின் மீள்அமைவிடமும் அபிவிருத்தியும்" என்ற முன்மொழிவு செய்யப்பட்டள பெரிய அபிவிருத்திக் கருத்திட்டத்துடன் பொதுவாகத் சேர்க்கப்பட்டுள்ளன. இப்பெரிய செயற்பாட்டின் பங்குதாரர்கள் இந்த இலக்கை அடைவதன் பொருட்டு திரட்டப்பட்டுக் கொண்டிருக்கின்ற வேளையில் மொறட்டுவ பல்கலைக்கழகத்தின் தொழினுட்ப நிறுவகமானது ஏற்கனவேயுள்ள அமைப்பின் கீழ் கிடைக்கக்கூடியனவாகவுள்ள வாய்ப்புகளைப் பயன்படுத்தி அதிகரிக்கப்பட்டுள்ள தரத்துடன் தற்போதுள்ள மாணர்களின் எண்ணிக்கையுடன் தேசிய தொழினுட்ப டிப்புளோமா நிகழ்ச்சித் திட்டத்தை நடாத்தும் தனது தேசிய கடமையை தொடர்ந்தும் நிறைவேற்றிக்கொண்டிருக்கும்.

**ஈ1) மொறட்டுவ பல்கலைக்கழகத்தின் தொழினுட்ப நிறுவகத்தின் மீள் அமைவிடம் அமைப்பதற்கும் அபிவிருத்தி செய்வதற்குமான கருத்திட்டம் சுருக்கமான விவரணம்**

| | | |
|---|---|---|
| மொத்தச்செலவு | : | 89.55 மில்லியன் ஐ.அ.டொலர்கள்:<br>சீன நிதியங்களும் அரசாங்க நிதியங்களும் |
| நீடிக்கும் காலம் | : | 33 மாதங்கள் |
| மாணவர்களின் அனுமதி | : | 350 மாணவர்களிலிருந்து<br>1000 மாணவர்களாக அதிகரிப்பு |
| புதிய கல்வி நெறிகள் | : | தகவல் தொழினுட்பம்,<br>விமானம் ஓட்டும் கலை,<br>இயந்திரவியல் கலை,<br>கணிய அளவை. |

**கருத்திட்ட இலக்குகள்**

இலங்கை, ஹோமகம, தியகமவில் மொறட்டுவ பல்கலைக்கழக தொழினுட்ப நிறுவகத்தின் புதிய கட்டடத்தொகுதியொன்றுக்கான உட்கட்டமைப்பு வசதியை வழங்குதல்.

- ❖ விரிவுரை மண்டபங்கள்
- ❖ பரிசோதனைக்கூடங்கள்
- ❖ வேலைக்களங்கள்
- ❖ நிருவாக கட்டடத்தொகுதிகள்
- ❖ மாணவர்கள் நிலையங்கள்
- ❖ மாணவர்கள் விடுதிகள்
- ❖ விளையாட்டு வசதிகள்
- ❖ மருத்துவ வசதிகள்
- ❖ பல்பணிகள் மண்டபம்

- ❖ பதவியினர்கள் அபிவிருத்தி நிலையம்
- ❖ அதிதி இல்லம்
- ❖ பதவி ஆளணியினர்களின் இடவசதி முதலியன.
- ❖ விரிவு மண்டபங்களுக்கும் நிருவாக கட்டடத்தொகுதிகளுக்கும் தேவைப்படும் சகல உபகரணங்களையும் தளபாடங்களையும் வழங்குதலும், வேலைக்களங்களுக்குத் தேவையான பரிசோதனைக்கூட உபகரணங்கள், பொறிக்கோப்புகள், உபகரணங்கள், தகவல் தொழினுட்ப உபகரணங்கள், வாகனங்கள் முதலியனவற்றை வழங்குதல்.
- ❖ பதவி ஆளணியினர்களுக்கு பயிற்சியளித்தலும் பாடத்திட்ட அபிவிருத்தியும்.

## 4. வளங்கள், மாணவர்களின் விவரங்கள்

### 4.1. தொழினுட்பவியல்நெறியில் தேசிய டிப்புளோமாவினதும் மொறட்டுவ பல்கலைக்கழகத்தின் தொழில்நுட்ப நிறுவகத்தின் நிறுவுதலினதும் சுருக்கமான வரலாறு

தொழினுட்பவியல் நெறியில் தேசிய டிப்புளொமாவின் அடித்தளமானது மருதானையிலுள்ள இலங்கை தொழினுட்பக்கல்லூரியின் 1940ஆம் ஆண்டுக்ள வரையான பின்னோக்கிய காலப்பகுதியைக் கொண்டுள்ளது. இங்கு லண்டன் பல்கலைக்கழகத்தின் பி.எஸ்.ஸி. (டீ.ளுஉ) பொறியியல் பட்டத்திற்கு மாணவர்களைத் தயார்ப்படுத்தும் தொழினுட்பவியலிலான நான்கு ஆண்டு காலப்பகுதிக்கும் கூடுதலாக இரண்டு ஆண்டுக்கால கனிடட தொழினுட்ப உத்தியோகத்தர் கல்வி நெறியொன்று நடாத்தப்பட்டது. கனிட்ட தொழினுட்ப உத்தியோகத்தர்கல்வி நெறியானது ஓர் நன்கு அங்கீகரிக்கப்பட்ட நடுத்தர தொழினுட்பக் கல்வி நெறியாகுமென்பதுடன் இந்த கல்வி நெறியைப் பூர்த்தி செய்தவர்கள் இந்நாட்டின் பொறியியலாளர் துறையின் அபிவிருத்திக்கு பெருமளவில் பங்களிப்புச் செய்துள்ளது.

1960ஆம் ஆண்டில் மொறட்டுவ கட்டுபெத்தையில் செய்முறைத்தொழினுட்பவியல் நிறுவகமானது நிறுவப்பட்டதுடன் கனிட்ட தொழினுட்ப உத்தியோகத்தர் கல்வி நெறியானது மருதானையிலிருந்து மொறட்டுவவிற்கு மாற்றப்பட்டது. செய்முறை தொழினுட்பவியல் நிறுவகமானது செய்முறை நோக்கிய இடைநிலைமட்ட பொறியியல் தொழினுட்பவியல் கல்வி நெறியை அபிவிருத்தி செய்வதற்கும் நடைமுறைப்படுத்துவற்குமாக கனடா அரசாங்கத்தின் உதவியுடன் நிறுவப்பட்டுள்ளது.

நடைமுறை தொழினுட்ப நிறுவகமானது மொறட்டுவ, கட்டுபெத்தையில் 1960ஆம் ஆண்டில் நிறுவப்பட்டதுடன் கனிட்ட தொழினுட்ப உத்தியோகத்தர்கள் கல்விநெறியானது மருதானையிலிருந்து மொறட்டுவவிற்கு மாற்றப்பட்டுள்ளது.

நடைமுறை தொழினுட்ப நிறுவகமானது 1966ஆம் ஆண்டில் இலங்கை தொழினுட்ப கல்லூரியாக தரமுயர்த்தப்பட்டதுடன் கல்வி நெறி திசை திருப்பப்பட்டதுடன் துரி அபிவிருத்தி ஏற்பட்டுள்ளது. இலங்கை தொழினுட்பகல்கல்லூரி தொழினுட்பக்கல்வி நெறியில் ஐந்தாண்டு டிப்புளோமா பட்டக்கல்வி நெறியை ஆரம்பித்துள்ளதுடன் கனிட்ட தொழினுட்ப உத்தியோகத்தர் கல்வி நெறியும் இந்நெறியில் ஓராண்டுககால பொறித்தொகுதியில் பயிற்சி என்பதை அறிமுகப்படுத்தியதன் மூலம் திருத்தப்பட்டதுடன் இதை மூன்று ஆண்டுக்காலக்கல்வி நெறியாக்கி அதை

தொழினுட்பவியலில் தேசிய டிப்புளோமா என்ற பட்டநெறியாக்கியுள்ளது. பின்னர் இலங்கை தொழினுட்பவியல் கல்லூரி 1972ஆம் ஆண்டில் இலங்கையின் தனியொரு பல்கலைக்கழகத்தின் வளாகமொன்ற என்ற நிலைக்கு உயர்த்தப்பட்டதுடன் பின்னர் இது மொறட்டுவ பல்கலைக்கழகமாக வளர்ச்சியடைந்துள்ளது. அப்போது தொழினுட்பவியலில் டிப்புளோமா கல்வி நெறியானது உயர்கல்வி அமைச்சின் சார்பில் பல்கலைக்கழகத்தினால் நடாத்தப்பட்டது.

1987ஆம் ஆண்டில் தொழினுட்பவியலில் தேசிய டிப்புளோமா கல்வி நெறியானது 1978ஆம் ஆண்டின் 16ஆம் இலக்க பல்கலைக்கழகச் சட்டத்தின் 29(உ) ஆம் பிரிவின் கீழ் மொறட்டுவ பல்கலைக்கழகத்தின் உள்ளகக்கல்வி நெறியாக்கியுள்ளதுடன் இக்கல்வி நெறியில் சேர்வதற்கான கல்வித்தகைமையானது க.பொ.த. (உயர்தரம்) ஆகியுள்ளது. 2000ஆம் ஆண்டின் 3ஆம் இலக்கக் கட்டளைச்சட்டத்தின்கீழ் 2000ஆம் ஆண்டில் தொழினுட்பவியலில் தேசிய டிப்புளோமா கல்வி நெறியையும் இது போன்ற மட்டத்திலான கல்வி நெறிகளையும் நடாத்துவதற்காக மொறட்டுவ பல்கலைக்கழகத்தின் கீழுள்ள நிறுவனமாகிய மொறட்டுவ பல்கலைக்கழகத்தின் தொழினுட்பவியல் நிறுவகமானது தாபிக்கப்பட்டுள்ளது. மொறட்டுவ பல்கலைக்கழகத்தின் தொழினுட்பவியல் நிறுவகம் முகாமைத்துவச் சபையொன்றின் கீழ் பணியாற்றிக்கொண்டிருக்கின்றதுடன் கல்வி நெறிகளின் சுதந்திரமான அபிவிருத்திக்காக இந்த நிறுவகத்தை பௌதீகரீதியாக புறம்பாக நிறுவுவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.

## 4.2. தொழினுட்பவியல் தேசிய டிப்புளோமா நிகழ்ச்சித்திட்டம் பற்றிய சுருக்கமான அறிமுகப்படுத்தல்

எமது நாட்டிற்கு பல்வேறு கல்வித்துறைகளில் தேவைப்படும் பொறியியல் டிப்புளோமா பட்டம் பெற்றவர்களை உருவாக்குவதே இக்கல்வி நெறியின் முதனிலைக் குறிக்கோளாகும். இந்த நிறுவகமானது மொத்தமாக 350 மாணவர்களுடன் ஒன்பது கல்வி நெறிகளில் தொழினுட்பவியில் தேசிய டிப்புளோமா நிகழ்ச்சித்திட்டத்தை நடாத்துகின்றது. இதன் ஆக்கம் பின்வருமாறு:-

| | |
|---|---|
| இரசாயனபொறியியல் தொழினுட்பம் | - 25 |
| சிவில் பொறியியல் தொழினுட்பம் | - 80 |
| மின் பொறியியல் தொழினுட்பம் | - 40 |
| இலக்ரோனிக் மற்றும் தொலைத்தொடர்பு பொறியியல் தொழினுட்பம் | - 40 |
| கடல்கரையோர பொறியியல் தொழினுட்பம் | - 15 |
| பொறிமுறை பொறியியல் தொழினுட்பம் | - 60 |
| கடல்சார் ஆய்வுகள் | - 15 |
| பொலிமர் தொழினுட்பம் | - 25 |
| புடவை மற்றும் உடைதொழினுட்பவியல் | - 50 |

இத்துடன் கூடுதலாக படையினர்களுக்கும் பல்கலைக்கழகத்தின் கல்விசாராப் பதவியினர்களுக்கும் உச்சமாக ஐந்து மாணவர்களின் சேர்ப்பிற்கு வசதி குறித்தொதுக்கப்பட்டுள்ளது.

தேசிய தொழினுட்ப டிப்புளோமா நிகழ்ச்சித்திட்டத்திற்கான சேர்ப்பு தனிச்சிறப்பானநடைமுறை மூலம் செய்யப்படுகின்றது. அரசாங்க வர்த்தமானியிலும் தெரிவு செய்யப்பட்ட பத்திரிகைகளிலும் இணையத்தளத்திலும் வெளியிடப்படும் பகிரங்க விளம்பரப்படுத்தல் மூலம் விண்ணபங்கள் கோரப்படுகின்றன. மூன்று கடந்தகால அடுத்தடுத்த க.பொ.த. உயர்தர பரீட்சைகளில் சித்தியடைந்துள்ள மாணவர்கள் விண்ணப்பம் செய்வதற்கு தகுதிடையவர்களாவர். மாணவர்கள் ணு புள்ளிகள், மாவட்ட ∴ சிறப்புத்திறமை பங்குவீதம் (பல்கலைக்கழக அனுமதி விடயத்தில் போல) என்ற அடிப்படை மீதும் வெவ்வேறு கல்விநெறிகளுக்கான அவர்களுடைய முன்னுரிமை மீதும் தெரிவு செய்யப்படுகின்றனர்.

இக்கல்வி நெறியானது இரண்டு ஆண்டுக்கால கல்விக்கற்கைக் காலப்பகுதியையும் ஓராண்டுக்கால கைத்தொழில் பயிற்சியையும் கொண்டுள்ளது. முதலாவது ஆண்டின் பாடங்கள் அடிப்படைய விஞ்ஞானங்களில் மாணனின் அறிவைச் சமப்படுத்துவதற்கும் திரட்டுவதற்கும் மேம்படுத்துவதற்கும் அவர் தெரிவு செய்யப்பட்டள்ள விசேட கற்கைத்துறைக்கு அவரை அறிமுகப்படுத்துவதற்குமாக வடிவமைக்கப்பட்டுள்ளது. அது பொறியியல் செய்முறைக்குத் தேவைப்படும் சில அடிப்படைத் தேர்ச்சிகளைப் பெறுவதற்கும் வழிசமைக்கும். (உதாரணம் வேலைக்கள தொழினுட்ப பொறியியல் வரைதல்). கற்கைத்துறை ஒவ்வொன்றும் மாணவரின் தெரிவுசெய்யப்பட்டள்ள கற்கைத்துறையின் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட துறைப்பாடங்களை வழங்குகின்றது. (உதாரணம்) சிவில் பொறியியல் பிரிவானது சிவில் பொறியியல் துறைக்கான கட்டட நிருமாணத்தை வழங்குகின்றது.)

பின்வரும் காரணங்களின் நிமித்தம் முதலாவது ஆண்டில் ஆங்கில மொழியானது ஓர் கட்டாயமான பாடமாகும்:-

i. டிப்புளோமா பட்டம் பெற்றவரின் வாழ்க்கைத் தொழிலில் முக்கியமானவொரு வகிபாகத்தை வகிக்கின்றது. எனவே கிரகித்தல், உரைநிகழ்த்துதல்,அறிக்கையை எழுதித்தயாரித்தல் ஆகியவற்றில் அவர்களுடைய தேர்ச்சிகளை விருத்தி செய்யுமாறு வேண்டப்படுகின்றனர்.

ii. தேசிய தொழினுட்பவியல் டிப்புளோமா கல்வி நெறியானது ஆங்கில மொழி மூலத்திலேயே முழுமையாக நடாத்தப்படுகின்றது. மாணர்களில் மிகப்பெரும்பாலானோர் க.பொ.த. (உயர்தரம்) வகுப்புவரையான கல்வயை சிங்கள மொழி மூலத்திலேயே அல்லது தமிழ்மொழி மூலத்திலேயே கற்றுள்ளவர்கள் என்பதன் காரணமாக ஆங்கிலமொழியிலான அவர்களுடைய தேரச்சி மட்டங்கள் பாரிய அளவில் மாறுபாடடைகின்றனவென்பதுடன் இதை மேம்படுத்துவதற்கான தேவை எப்போதும் உள்ளது.

இரண்டாவது ஆண்டின் பாடங்கள் பிரதானமாக தெரிவு செய்யப்பட்டுள்ள கற்கைத்துறையில் பல்வேறு பொறியியல் நடப்புகள் பிரயோகிக்கப்படுவதை உள்ளடக்குகின்றன.

மூன்றாவது ஆண்டு இக்கைத்தொழிலில் தேவைப்படும் நேரடியான அனுபவத்தைப் பெறுவதற்காகக் குறித்தொதுக்கக்கப்பட்டுள்ளது. இவர்கள் ஏற்றுக்கொள்ளப்பட்ட கைத்தொழில் தாபனங்களில் பயிற்சி பெறுதல் தேசிய பயிலுநர் மற்றும் கைத்தொழில் பயிற்சி அதிகாரசபையினாலும்

மொறட்டுவ பல்கலைக்கழகத்தின் தொழினுட்ப நிறுவகத்தில் கைத்தொழில் பயிற்சிக்குப் பொறுப்பாகவுள் விரிவுரையாளர்களினாலும் ஒழுங்குபடுத்தப்படுவதுடன் கண்காணிக்கவும்படுகின்றது.

கல்வியும் பயிற்சியும் வழங்கப்பட்டு மூன்று ஆண்டுகளின் முடிவில் சித்தியடையும் மாணவர்களுக்கு பல்கலைக்கழகத்தினால் அங்கீகரிக்கப்படும் தகவுத்திறன்களின் அடிப்படையில் சாதாரண சித்தியுடன், அல்லது திறமைச்சித்தியுடன் அல்லது அதிதிறமைச்சித்தியுடன் தொழினுட்பவியலில் தேசிய டிப்புளோமா பட்டம் வழங்கப்படுகின்றது.

தேடிக்கண்டுப்பிடித்தல் கற்கை நெறிகள் 100 நூற்றுவீதமளவில் தேசிய தொழினுட்ப டிப்புளோமா பட்ம் பெற்றவர்கள் பரீட்சையில் சித்தியடைந்து ஓராண்டிற்குள் வேலைவாய்ப்பு பெற்றுக்கொண்டுள்ளமையைக் காண்பித்துள்ளது.

மொறட்டுவ பல்கலைக்கழகத்தின் தொழினுட்ப நிறுவகத்தில் தற்போது தொழிற்பாட்டிலுள்ள புதிய கல்விசார் பாடத்திட்டம் முதலாவது ஆண்டு மாணவர்களுக்கு 2005ஆம் ஆண்டிலும் இரண்டாவது ஆண்டு மாணவர்களுக்கு 2006ஆம் ஆண்டிலும் அறிமுகப்படுத்தப்பட்டது. இதன் நோக்கம் என்னவெனில் கைத்தொழில் உலகிலுள்ள தற்போதைய தொழினுட்ப முன்னேற்றங்களுடன் இணைவாகவிருக்கத்தக்கதாக மாணவர்களுக்கு அவர்களுடைய தெரிவு செய்யப்பட்ட கற்கைத்துறைகளில் அவர்களுடைய அறிவை பரந்துபட்டதாக்குவதாகவிருந்தது.

## அட்டவணை: பதவியினர்களினதும் மாணவர்களினதும் விவரங்கள்

| பகுதிகள் | கல்விநெறி | மாணவர்களின் மொத்த எண்ணிக்கை | மொத்தக் கல்விசார் பதவியினர் | மொத்த கல்விசாராத பதவியினர்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| சிவில் பொறியியல் தொழினுட்பவியல் | தே.தொ.டி. | 241 | **விரிவுரையாளர்கள்**<br>நி – 05<br>த – 01<br>இடைவருகை -04<br>**போதனாசிரியர்கள்**<br>த – 04<br>ஒ – 01<br>இடைவருகை -04 | நி - 01 |
| பொறிமுறைப் பொறியியல் தொழினுட்பவியலும் கடற்கரையோரக் கற்கைகள் | தே.தொ.டி. | 258 | **விரிவுரையாளர்கள்**<br>நி – 08<br>ஒ– 02<br>இடைவருகை -08<br>**போதனாசிரியர்கள்**<br>த – 01<br>இடைவகை -15 | நி - 01 |

| | | | | |
|---|---|---|---|---|
| பொலிமர், புடைவை மற்றும் இரசாயனப் பொறியியல் தொழினுட்பவியல் | தே.தொ.டி. | 283 | **விரிவுரையாளர்கள்**<br>நி – 09<br>ஒ– 01<br>இடைவருகை -08<br>**போதனாசிரியர்கள்**<br>த – 04<br>இடைவருகை -03 | த - 01 |
| மின், இலக்ரோனிக், தொலைத்தொடர்பு பொறியியல் தொழினுட்பவியல் | தே.தொ.டி. | 244 | **விரிவுரையாளர்கள்**<br>நி – 09<br>ஒ– 01<br>இடைவருகை -06 | த - 01 |
| இடை ஒழுக்காற்று கற்கைகள் | தே.தொ.டி. | | **விரிவுரையாளர்கள்**<br>நி – 07<br>ஒ – 01<br>த – 02<br>**போதனாசிரியர்கள்**<br>த – 01<br>இடைவகை -02 | த - 01 |

**நி– நிரந்தர ஒ – ஒப்பந்தம் த – தற்காலிக**
**இடைவருகை**

**5. உள்நாட்டு மாணவர்களின் விவரங்கள்**

ஒன்பது கற்கை நெறிகளுக்கு அதாவது பெயரளவில் இரசாயன, புடைவை, பொலிமர், சிவில், மின், இலக்ரோனிக், கடற்கரையோர, எந்திரப் பொறியியல், கடல்சார் பொறியியல் ஆகிய கற்கை நெறிகளுக்கு 350 உள்நாட்டு மாணவர்கள் சேர்த்துக் கொள்ளப்பட்டனர்.

**கல்விசாா் பதவியினரின் விபரப் பொழிப்பு**

| **பகுதி** | **கல்வி நெறி** | **மொழி மூலம்** | **உள் ளெடு ப்பு** | **1வது ஆ ண் டு** | **2வது ஆ ண் டு** | **3வது ஆ ண் டு** | **டிப்புளோமா பட்டம் பெற்ற வர்கள்** |
|---|---|---|---|---|---|---|---|
| சிவில் பொறியியல் தொழினுட்பவியல் | தே.தொ.டி | ஆங்கிலம் | 80 | 81 | 82 | 78 | 70 |
| பொறிமுறை பொறியியல் தொழினுட்பவியல், கடற்கரையோர கற்கை நெறிகள் | தே.தொ.டி | ஆங்கிலம் | 90 | 80 | 86 | 92 | 88 |
| பொலிமர், புடைவை, இரசாயனப் பொறியியல் | தே.தொ.டி | ஆங்கிலம் | 100 | 98 | 95 | 90 | 72 |
| மின், இலத்திரோனிக், தொலைத் தொடர்பும் | தே.தொ.டி | ஆங்கிலம் | 80 | 81 | 83 | 80 | 76 |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| பொறியியல் | | | | | | | |
| இடைக் கற்கை நெறிகள் | தே.தொ.டி | ஆங்கிலம் | | | | | |
| **மொத்தம்** | | | 350 | 340 | 346 | 340 | 306 |

### 6. வெளிநாட்டு மாணவர்களின் விவரங்கள்

வெளிநாட்டு மாணவர்கள் இந்த நிறுவனத்திலுள்ள கற்கைநெறிகளில் சேர்ந்து கல்வி கற்பதற்கு அனுமதிக்கப்படவில்லை.

### 7. கல்விசார் பதவியினர்களின் விவரங்கள்

இந்த நிறுவகத்தில் 38 நிரந்தர கல்விசார் பதவியினர்கள் உள்ளனர். கல்வி நடவடிக்கைகளில் ஒப்பந்த, தற்காலிக மற்றும் இடைவருகை பதவியினர்களின் சேவைகளும் பயன்படுத்தப்படுகின்றன.

| **பகுதி** | **பாடம்** | **மொழி மூலம்** | **சிரேட்ட பேராசிரியர்** | **பேராசிரியர்** | **சிரேட்ட விரிவுரையாளர்** | **விரிவுரையாளர்** | **நுவுயு** | **போதனாசிரியர்கள்** |
|---|---|---|---|---|---|---|---|---|
| சிவில் பொறியியல் தொழினுட்பவியல் | சிவில் | ஆங்கிலம் | - | - | 04 | 01 | - | 04 |
| எந்திரப் பொறியியல் தொழினுட்பவியலும் கடற்கரையோர கற்கை நெறிகளும் | எந்திரப் பொறியியல் கடற்கரையோரக் கற்கை நெறிகள் | ஆங்கிலம் | - | - | -<br>04 | -<br>03 | -<br>01 | -<br>01 |
| பொலிமர், புடைவை மற்றும் இரசாயன பொறியியல் தொழினுட்பவியல் | புடைவை<br>பொலிமர்<br>இரசாயனம் | -<br>ஆங்கிலம்<br>- | -<br>-<br>- | -<br>-<br>- | 02<br>-<br>- | 01<br>03<br>03 | 01<br>-<br>- | 04 |
| மின், இலத்திரோனிக்ஸ் மற்றும் தொலைத்தொடர்பும் பொறியியல் தொழினுட்பவியல் | மின் | ஆங்கிலம்<br>-<br>- | -<br>-<br>- | -<br>-<br>- | -<br>-<br>- | 04<br>04 | -<br>- | 10<br>12 |
| இடையீட்டு கற்கை நெறிகள் | கணிதம்<br>தகவல் தொழினுட்பம்<br>ஆங்கிலம் | ஆங்கிலம்<br>- | - | - | 03<br>-<br>01 | 01<br>01<br>01 | -<br>-<br>- | 01<br>01<br>- |
| **மொத்தம்** | | | | | 14 | 22 | 02 | 33 |


## 8. கல்விசாராப் பதவியினர்களின் விவரங்கள்

இந்த நிறுவகமானது இரண்டு பிரதான நிருவாகக் கிளைகளையும் நிதி மற்றும் பொது நிருவாகக் கிளையையும் கொண்டுள்ளது.

| **கிளை** | **அதிசிரேட்ட** | **சிரேட்ட பதவியினர்கள்** | **கனிட்ட பதவியினர்கள்** | **சிறுபதவியினர்கள்** |
|---|---|---|---|---|
| நிதிப்பிரிவு | - | 02 | 05 | - |
| பொதுநிருவாகம் | - | 03 | 07 | 04 |
| **மொத்தம்** | - | **05** | 12 | **04** |

8.1. அமைப்பு அட்டவணை - 2013

படம் 1 மொறட்டுவ பல்கலைக்கழகத்தின் தொழினுட்பவியல் நிறுவகத்தின் பலதரப்பட்ட படிகளையுடைய கட்டமைப்பைக் காண்பிக்கின்றது.



## 9. ஆராய்ச்சி, புதுப்பித்தல், வெளியீடுகள் பற்றிய விவரங்கள்

மொறட்டுவ பல்கலைக்கழகத்தின் தொழினுட்பவியல் நிறுவகத்தின் பதவியினர்களினால் செய்யப்பட்ட ஆராய்ச்சியின் காண்புகள் உள்நாட்டு ரீதியாகவும் சர்வதேச ரீதியாகவும் சமர்ப்பிக்கப்பட்டும் அல்லது வெளியிடப்பட்டுள்ளன.

| **ஆசிரியர்கள்** | **கட்டுரையின் தலையங்கம்** | **மாநாடு** |
|---|---|---|
| **ஜி.டபிள்யு.ரி.சி. கண்டம்பியும்** பேராசிரியர் (திருமதி) சி.ஜயசிங்கவும் | சீமெந்தினால் உறுதிப்படுத்தப்பட்ட அடித்து இறுக்கப்பட்ட மண்சுவர் சந்திப்பு இடங்கள் | சர்வதேச கட்டுமான வேலைச்சங்கம் |
| **கே.ஏ.பி. வீரசிங்க** | இலங்கை நிர்மாணக் கைத்தொழிலின் அபிவிருத்தி மீது செல்வாக்கு செலுத்துகின்ற காரணிகள் | வருடாந்த மாநாட்டு நடவடிக்கை, றுகுணு பல்கலைக்கழகம் |
| **எம்.சி.டபிள்யு. சோமரத்தின** என்.எம்.வி. லியனகே, எஸ். வல்பலாகே | மேற்பரப்பு திருத்தியமைக்கப்பட்ட சிலிக்காவுடன் இயற்கை இறப்பர்ப்பால் படலங்களைப் பலப்படுத்துவது மீது ஐதரசன் பிணிப்புகளின் பங்களிப்பும் இணைத்தல் எதிர்விளைவுகளும் | உயர்தரப் பொருட்கள், விஞ்ஞானம், பொறியியல் மீதான முதலாவது சர்வதேச மாநாடு (ஐஊயுஆளுநு’52) |
| **எம்.சி.டபிள்யு. சோமரத்தின** என்.எம்.வி. லியனகே, எஸ். வல்பலாகே | பாரிய மூலக் கூறு இணைத்தல் முகவருடன் மேற்பரப்பு திருத்தியமைக்கப்பட்ட சிலிக்கா மூலமாக இயற்கை இறப்பர்ப்பால் படலங்கள் மூலமாக பலப்படுத்துதல். | பொருட்கள், கனிப்பொருட்கள், பொலிமர் மீதான ஆசிய சர்வதேச மாநாடு (ஆயுஆஜீ2012) |
| **எம்.சி.டபிள்யு. சோமரத்தின** என்.எம்.வி. லியனகே, எஸ். வல்பலாகே | இயற்கை இறப்பர்ப்பாலின் பலப்படுத்துகை மீது ஐதரோபீலிக் பொலிமருடனான சிலிக்காவின் மேற்பரப்பு திருத்தியமைத்தல் | பொலிமர் விஞ்ஞானம் மற்றும் தொழினுட்பவியல் மீதான சர்வதேச கருத்தரங்கு |
| **ஜி.கே.ஜயதுங்கவும் பி.எம்.டபிள்யு.பி.கே. அமரசிங்கவும்** | வெப்பமூட்டப்பட்ட உமியிலிருந்து நிறச் சேர்க்கைகளின் அகற்றுகை | மொறட்டுவ பல்கலைக்கழகத்தின் தொழினுட்பவியல் நிறுவகத்தின் வருடாந்த ஆராய்ச்சிக் கருத்தரங்கு |

| ஆசிரியர்கள் | கட்டுரையின் தலையங்கம் | மாநாடு | சஞ்சிகைகள் |
|---|---|---|---|
| **எச்.டி.எஸ். கருணாரத்தினாவும்** பி.ஜி. இரத்தினசிறியும் | கணித மாதிரியுருவெடுத்தலையும் உருவமைத்தலையும் பயன்படுத்தி பிளக் ஓட்டத்தை தடுத்தல். காற்றின்றிய சுவாச சமிபாட்டுக் கருவிகள் பற்றிய ஆய்வு | | இலங்கை ஒன்றிணைக்கப்பட்ட பொறியியலாளர்கள் நிறுவகம் தொகுதி 13, இல 1, 2013 யூலை |
| **எச்.டி.எஸ். கருணாரத்தினாவும்** பி.எம்.டபிள்யு.பி.கே. அமரசிங்கவும் | கரும்பு சக்கையிலிருந்து தயாரிக்கப்பட்ட ஏவப்பட்ட காபனிலிருந்து நீர்த்தன்மையுடைய பீனோலை அகற்றுவதற்கான நிலையான படுகை உறிஞ்சல் பற்றிய ஆய்வுகள் | 10வது சூழலியல் சக்தி மற்றும் பொருள் விஞ்ஞானம், பொறியியல் கருத்தரங்கு | எனர்ஜி புரோசீடியா (விசேட வெளியீடு) |
| **எச்.டி.எஸ். கருணாரத்தினாவும்** எஸ். வல்பலாகேயும் | இலங்கையில் அமுக்கம் தடுக்கப்பட்ட சவ்வூடு பரவல் மின்சக்தி பிறப்பித்தலின் பிரயோகம் | | எனர்ஜி புரோசீடியா (விசேட வெளியீடு) |
| **எச்.டி.எஸ். கருணாரத்தினாவும்** பி.எம்.டபிள்யு.பி.கே. அமரசிங்கவும் | நீர்க்கரைசல்களிலிருந்து பீனொலை அகற்றுவதற்காக கரும்பு சக்கையை அடிப்படையாகக் கொண்ட உள் உறிஞ்சியாக ஏவப்பட்ட காபன் | | இரசாயனப் பொறியியல் மீதான சர்வதேச மாநாட்டின் நடவடிக்கைகள், பங்களாதே‘ |
| **ஆள கே. எம். டபிள்யு. அபேகோன்** | கைத்தொழில் துறையில் அங்கவீனர்களின் திறனை அதிகரிப்பதற்கு தற்போதுள்ள பொறிமுறைகள் | | பொறியியல், வர்த்தக மற்றும் தொழில் முயற்சி பிரயோகங்களின் சர்வதேச சஞ்சிகை |

## 10. நிகழ்ச்சித்திட்டம், கருத்தரங்குகள், வேலைக்களங்களின் விவரங்கள்

1. மொறட்டுவ பல்கலைக்கழகத்தின் தொழினுட்ப நிறுவகத்தின் கல்விசார் பதவியினர்களினால் செய்யப்பட்ட ஆராய்ச்சிக்காண்புகள் சமர்ப்பிக்கப்படுவதற்கு வசதியளித்த முதலாவது வருடாந்த ஆராய்ச்சிக் கருத்தரங்கு 2013 மே மாதத்தில் நடாத்தப்பட்டது.

2. மொறட்டுவ பல்கலைக்கழகத்தின் தொழினுட்ப நிறுவகத்தின் மாணவர்களின் தலைமைத்துவ குணாதிசயங்களை அதிகரிப்பதற்காக 2013 திசெம்பரில் தொழில்சார் அபிவிருத்தி வெளிக்கள பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் நடாத்தப்பட்டது.

3. தேசிய டிப்புளோமா தொழினுட்ப சிவில் பொறியியல் மாணவர்களுக்கு 2013 திசெம்பரில் பொகவந்தலாவ பெருந்தோட்ட பயிற்சி நிலையத்தில் வருடாந்த அளவை முகாம் நடாத்தப்பட்டது.

4. சகல நிருவாகப் பதவியினர்களுக்கும் கல்விசாராத பதவியினர்களுக்கும் 2013 திசெம்பரில் “விளைபயனுள்ள அலுவலக முகாமைத்துவ முறைமைகளும் அரசாங்க கொள்வனவு நடைமுறைகளும்” எனத் தலையங்கமிடப்பட்ட ஒருநாள் பதவியினர்கள் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் நடாத்தப்பட்டது.

11. **பெற்றுக்கொள்ளப்பட்ட அளிப்புகள்:**
**அளிப்புகள் வைபவத்தில் 20 மாணவர்களினால் அதிசிறப்புச் சான்றிதழ்கள் பெறப்பட்டுள்ளன.**

| | |
|---|---|
| சிவில் பொறியியல் தொழினுட்பம் | 05 |
| மின்பொறியியல் தொழினுட்பம் | 03 |
| இலத்திரனியல் பொறியியல் தொழினுட்பம் | 01 |
| பொறிமுறை பொறியியல் தொழினுட்பம் | 02 |
| கடல்சார் ஆய்வுகள் | 04 |
| பொலிமர் தொழினுட்பம் | 04 |
| புடைவைப் பொறியியல் தொழினுட்பம் | 01 |

12. **ஆரம்பிக்கப்பட்டுள்ள புதிய கல்விநெறிகள்**

இந்த நிறுவகமானது தியகமவிலுள்ள இந்நிறுவகத்தின் புதிய மனையிடத்தில் மீளமைக்கப்படும் போது உத்தேசிக்கப்பட்டுள்ள புதிய கல்வி நெறிகள் ஆரம்பிக்கப்படும்.

13. **மீண்டுவரும் செலவினத்தின் விபரங்கள்** **ரூபா."000**

| **விடயம்** | **2012ரூ** | **2013ரூ** |
|---|---:|---:|
| அ. ஆளுக்குரிய வேதனாதிகள் | 62,767 | 83,944 |
| ஆ. பிரயாணம் | 76 | 299 |
| இ. வழங்கல்கள் | 2,762 | 4,854 |
| ஈ. பராமரிப்பு | 1,188 | 774 |
| உ. ஒப்பந்தச் சேவை | 4,212 | 4,621 |
| ஊ. ஏனையவை | 7,730 | 11,534 |
| **மொத்தம்** | **78,735** | **106,026** |

14. **மூலதனச் செலவினத்தின் விபரங்கள்** **ரூபா."000**

| **விடயம்** | **2012ரூ** | **2013ரூ** |
|---|---:|---:|
| அ.தளபாடங்களினதும் சோதனைக் கூட மற்றும் அலுவலக உபகரணங்களின் கொள்ளல் | 527 | 7,318 |
| ஆ. பொறித் தொகுதியினதும் பொறிக் கோப்புக்களினதும் கொள்ளல் | - | - |
| இ.கட்டடமும் கட்டமைப்புக் களும் (தியகம) | 180 | - |
| ஈ.கட்டடங்களின் புனரமைப்பும் மேம்பாடும் | 252 | 104 |
| உ.ஏனையவை (புத்தகங்கள்) | 593 | 656 |
| **மொத்தம்** | **1,552** | **8,078** |

15. கருத்திட்டங்களின் விபரங்கள் (உள்நாட்டினால் ∴ வெளிநாடுகளினால் நிதியளிக்கப்பட்டவை)

| பெயரும் விபரங்களும் | கடன் ∴ மானியம் | நிதியளிக்கும் முகவர் நிலையம் | மொத்த செலவு மதிப்பீடு | மீள நிர்ப்பந்திக்கப்பட்ட வெளிநாட்டு உதவி | நன்கொடையளிக்கப்பட்ட நிதியம் |
|---|---|---|---|---|---|
| தியகமவில் மொறட்டுவ பல்கலைக்கழகத்தின் மீள் அமைவிடமும் அபிவிருத்தியும் | கடன் | எக்சிம் வங்கி சீனா ∴ இலங்கை அரசாங்கம் | 89 மில்லி ஐ.அ.டொ | | |
| **மொத்தம்** | | | **89 மில்லி ஐ.அ.டொ** | | |

சூ (இலங்கை அரசாங்கம் ∴ ஆஅவ ∴ சஅமு ∴ உ.வ ∴ ....)

16. கருத்திட்டச் செலவினத்தின் விபரங்கள் (உள்நாட்டினால் ∴ வெளிநாடுகளினால் நிதியளிக்கப்பட்டவை)

| பெயர் | மொ.ம.செ. ரூபா | 2012இல் செலவினம் ரூபா | 2013இல் செலவினம் | 2013.12.31இல் இருந்தவாறான திரண்ட செலவினம் | பௌதிக முன்னேற்றத்தின் மூ |
|---|---|---|---|---|---|
| தியகமவில் மொறட்டுவ பல்கலைக்கழகத்தின் தொழினுட்ப நிறுவகத்தின் மீள் அமைவிடமும் அபிவிருத்தியும் | ஐ.அ.டொ. 89 மில்லியன் | 7,702 | 7,414 | 57,778 | |
| **மொத்தம்** | | **7,702** | **7,414** | **57,778** | |

17. நிதி முன்னேற்றத்தின் விபரங்கள் (செலவினம்)

| விடயம் | 2013இல் ஏற்பாடு ரூபா | 2013 இல் செலவினம் ரூபா | சேமிப்பு ∴ மிகை ரூபா |
|---|---|---|---|
| அ. கருத்திட்டம் நீங்கலாக மீண்டுவரும் | 114,618 | 106,026 | 8,592 |
| ஆ. கருத்திட்டம் நீங்கலாக மூலதனம் | 10,127 | 7,974 | 2,153 |
| இ. கருத்திட்டம் - உள்நாட்டு நிதியம் | | | |
| ஈ. கருத்திட்டம் - வெளிநாட்டு நிதியளிக்கப்பட்டது | | | |
| **மொத்தம்** | **124,745** | **114,000** | **10,745** |

18. நிதி முன்னேற்றத்தின் விபரங்கள் (பிறப்பிக்கப்பட்ட வருமானம்)

| வருமான மூலம் | 2013 இல் ஏற்பாடு ரூபா | 2013 இல் சேகரிப்பு ரூபா | பற்றாக்குறை ∴ மிகை ரூபா |
|---|---|---|---|
| அ. பட்டப்படிப்புகள் | 450 | 2,418 | 1,918 |
| ஆ. பட்டப்பின்படிப்புகள் | | | |
| இ. உசாவுதல்கள் | | | |
| ஈ. ஏனையவை | | | |
| **மொத்தம்** | **450** | **2,418** | **1,918** |

19. நிதிச்செயலாற்றுகை பகுப்பாய்வு - 2013

| விடயம் | சூத்திரம் | மாணவரொருவருக்கான செலவு |
|---|---|---|
| அ. மாணவரொருவருக்கான மீண்டு வருஞ் செலவினம் | மாணவர்களின் எண்ணிக்கை | 102 |
| ஆ.மாணவரொருவருக்கான மூலதனச் செலவினம் | மாணவர்களின் எண்ணிக்கை | 8 |
| **மொத்தம்** | | **110** |

**20. 2013ஆம் ஆண்டில் பெற்றுக்கொள்ளப்பட்ட உட்கட்டமைப்பு வசதிகளின் விபரங்கள்:**

மொறட்டுவ பல்கலைக்கழகத்தின் உட்கட்டமைப்பு வசதிகளை மொறட்டுவ பல்கலைக்கழகத்தின் தொழினுட்ப நிறுவகம் 2000ஆம் ஆண்டிலிருந்து பகிர்ந்துகொண்டிருக்கின்றது.

**21. இந்த அறிக்கைக்கு இயைபுள்ள ஏதேனும் பிறவிவரங்கள் ∴ செயலாற்றுகை**

மொறட்டுவ பல்கலைக்கழகத்தின் தொழினுட்ப நிறுவகத்தின் மீள் அமைவிட அபிவிருத்திக் கருத்திட்டத்தின் உத்தேசிக்கப்பட்ட கட்டடத்தொகுதிக்கான அத்திவாரக்கல் 2013 யூலை மாதத்தில் நிலைநாட்டப்பட்டது.

## தொழினுட்ப நிறுவகம் - மொறட்டுவ பல்கலைக்கழகம்
## நிதி நிலைமை பற்றிய கூற்று
## 2013 திசெம்பர் 31இல் இருந்தவாறானது

| சொத்துக்கள் | குறிப்புகள் | 2013 ரூபா | 2013 ரூபா | 2012 ரூபா | 2012 ரூபா |
|---|---|---|---|---|---|
| **நடைமுறைச் சொத்துக்கள்** | | | | | |
| வங்கியிலுள்ள காசு | 1 | 3,950,953 | | 11,559,779 | |
| பெறத்தக்கவைகள் | 2 | 11,817,820 | | 5,730,996 | |
| இருப்பு | | 905,686 | | 938,477 | |
| முற்கொடுப்பனவுகள் | | 209,854 | | 0 | |
| முதலீடுகள் | | 18,000,000 | **34,884,313** | 17,500,000 | **35,729,252** |
| **நடைமுறையல்லாத சொத்துக்கள்** | | | | | |
| முதலீடுகள் நீண்டகால | 3 | 14,322,786 | | 11,409,989 | |
| ஆதனங்கள், பொறித் தொகுதி உபகரணங்கள் | 4 | 58,372,195 | | 63,970,556 | |
| நடைபெற்றுக் கொண்டிருக்கும் வேலை | 4ய | 19,596,306 | | 5,286,444 | |
| ஏனைய சொத்துகள் | 5 | 1,429,594 | | 1,193,329 | |
| | | | 93,720,881 | | 81,860,318 |
| **மொத்த சொத்துகள்** | | | 128,605,194 | | 117,589,570 |
| **பொறுப்புகள்** | | | | | |
| **நடைமுறை பொறுப்புகள்** | | | | | |
| கொடுபடத்தக்கவைகள் | 6 | | | | |
| பிற்போடப்பட்ட வருமானம் | 7 | | | | |
| சேர்ந்த செலவுகள் | 8 | 4,548,145 | 10,253,212 | 3,030,231 | 9,873,242 |
| **நடைமுறையல்லாத பொறுப்புகள்** | | | | | |
| பணிக்கொடைக்கான ஏற்பாடு | | | 15,532,956 | | 11,975,017 |
| **மொத்த பொறுப்புகள்** | | | (25,786,168) | | (21,848,259) |
| **மொத்த தேசிய சொத்துகள்** | | | 102,819,026 | | 95,741,311 |
| **தேறிய சொத்துகள் ∴ சமத்துவம்** | | | | | |
| மூலதன மானியம் - செலவழிக்கப்பட்டது | 9 | 31,442,352 | | 30,998,880 | |
| நடைபெற்றுக்கொண்டிருக்கும் மூலதனக் கணக்கு | 9(ய) | 37,784,571 | | 30,286,444 | |
| மூலதன மானியம்- செலவழிக்கப்பட்டது | 10 | 15,469,651 | | 36,675,468 | |
| பொது ஒதுக்கம் | 11 | (13,772,390) | | (17,939,735) | |
| நன்கொடைகள் பணமல்லாத | 12 | 3,975,000 | | 3,975,000 | |
| அரசாங்க மானியம் | 13 | 7,250,000 | | 7,250,000 | |
| திரண்ட நிதியம் | 14 | 20,669,842 | | 14,495,254 | |
| | | | 102,819,026 | | 95,741.311 |
| **மொத்த தேறிய சொத்துக்கள் ∴ சமத்துவம்** | | | 102,819,026 | | 95,741.311 |

சரியானதும் சான்றுப்படுத்தப்பட்டதும்

| | | |
|---|---|---|
| திருமதி. எம்.எம்.பீ.டி.சமரசேகர | திரு.எஸ்.சிறிமானே | திருமதி. கே.சி.எஸ்.பெரேரா |
| தொழினுட்ப நிறுவகம் | பிரதி நிதியாளர் | பிரதிப்பதிவாளர் |

## தொழினுட்ப நிறுவகம் - மொறட்டுவ பல்கலைக்கழகம்
## 2013 திசெம்பர் 31இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றுகையின் கூற்று

| | குறிப்பு | 2013 | 2012 |
|---|---|---|---|
| | | | ரூபா |
| | ரூபா | | |
| <u>தொழிற்பாட்டு வருமானம்</u> | | | |
| மீண்டுவரும் மானியம் | | 101,300,000 | 74,700,000 |
| பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் வழங்கப்பட்ட மானியம் | | | |
| அரசாங்க மானியம் - மகாபொல | | 2,585,000 | 1,847,000 |
| அரசாங்க மானியம் - உதவிப்பணம் | | 10,976,000 | 12,156,150 |
| பிறவருமானம் | 15 | 2,420,958 | 1,788,690 |
| கடன் தீர்வு செய்தல் | | 6,546,884 | 5,249,994 |
| | | 123,828,842 | 95,741,834 |
| <u>தொழிற்பாட்டுச் செலவுகள்</u> | | | |
| ஆளுக்குரிய வேதனாதிகள் | 16 | 78,547,461 | 62,767,021 |
| பிரயாணம் | 17 | 295,725 | 75,501 |
| பயன்படுத்தப்பட்ட வழங்கல்களும் நுகரத்தக்க பொருட்களும் | 18 | 3,361,033 | 2,761,55 |
| பராமரிப்பு | 19 | 1,142,909 | 1,187,736 |
| ஒப்பந்தச் சேவைகள் | 20 | 4,012,654 | 4,212,321 |
| ஆராய்ச்சியும் அபிவிருத்தியும் | 21 | 614,028 | 426,180 |
| மதிப்பிறக்க மற்றும் கடன் தீர்த்தல் செலவுகள் | | 6,546,884 | 6,514,994 |
| பிற தொழிற்பாட்டு செலவுகள் | 22 | 12,942,349 | 7,314,062 |
| மகாபொல | | 2,585,000 | 1,847,000 |
| உதவிப்பணம் | | 10,976,000 | 12,156,150 |
| **மொத்த தொழிற்பாட்டுச் செலவுகள்** | | 121,024,043 | 99,252,520 |
| **தொழிற்பாட்டு செயற்பாடுகளிலிருந்து பெறப்பட்ட (மிகை.·. பற்றாக்குறை)** | | 2,804,799 | (3,510,686) |

எஸ்.சிறிமானே
பிரதிப் பொருளாளர்

## தொழினுட்ப நிறுவகம் - மொறட்டுவ பல்கலைக்கழகம்
## 2013 திசெம்பர் 31இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றுகையின் கூற்று

| | குறிப்புகள் | 9 செலவழிக்கப்பட்ட மூலதன மானியம் ரூபா | 9ய காணிக்கான கொடுப்பனவு ரூபா | 10 செலவழிக்கப்படாத மானியம் ரூபா | 11 பொது ஒதுக்கம் ரூபா | 12 நன்கொடைகள் ரூபா | 13 பணமல்லாத அரசாங்க மானியம் ரூபா | 14 திரண்ட நிதியம் ரூபா | மொத்தம் ரூபா |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| **2011 திசெம்பர் 31இல் இருந்தவாறான மீதி** | | 34,081,951 | 30,106,904 | 27,076,928 | (15,377,749) | 3,975,000 | 4,200,000 | 11,333,814 | 95,396,848 |
| நிதிச் செயலாற்றுகைக் கூற்றில் அங்கீகரிக்கப்படாத தேறிய இலாபங்களும் நட்டங்களும் | | | | | 948,700 | | | | 948,700 |
| மாற்றங்கள் ∴ தேறிய நகர்வுகள் | | 2,229,508 | 179,540 | (401,460) | | | 3,050,000 | 3,161,440 | 8,219,028 |
| மிகை ∴ இக்காலப்பகுதிக்கான பற்றாக்குறை | | | | | (3,510,686) | | | | (3,510,686) |
| கடன் தீர்வு செய்தல் | | (5,312,579) | | | | | | | (5,312,579) |
| **2012 திசெம்பர் 31இல் இருந்தவாறான மீதி** | | 30,998,880 | 30,286,444 | 26,675,468 | (17,939,735) | 3,975,000 | 7,250,000 | 14,495,254 | 95,741,311 |
| மிகை ∴ சொத்துகளின் மீள் மதிப்பீடு மீதான பற்றாக்குறை | | | | | | | | | |
| மாற்றங்கள் ∴ தேறிய நகர்வுகள் | | 8,257,690 | 7,498,127 | (11,205,817) | | | 0 | 6,174,588 | 10,724,588 |
| நிதிச் செயலாற்றுகையின் கூற்றில் அங்கீகரிக்கப்படாத தேறிய இலாபங்களும் நட்டங்களும் | | | | | 1,362,546 | | | | 1,362,546 |
| கடன் தீர்வு செய்தல் | | (7,814,218) | | | | | | | (7,814,218) |
| இக்காலப்பகுதிக்கான மிகை ∴ (குறைவு) | | | | | 2,804,799 | | | | 2,804,799 |
| **2013 திசெம்பர் 31இல் இருந்தவாறான மீதி** | | 31,442,352 | 37,784,571 | 15,469,651 | (13,772,390) | 3,975,000 | 7,250,000 | 20,669,842 | 102,819,026 |

**திரு.எஸ்.சிறிமானே**
**பிரதிப் பொருளாளர்**

## தொழினுட்ப நிறுவகம் - மொறட்டுவ பல்கலைக்கழகம்
## 2013 திசெம்பர் 31இல் முடிவடைந்த ஆண்டிற்கான
## காசுப்பாய்ச்சல் கூற்று

| | குறிப்புகள் | 2013 | | 2012 | |
|---|---|---|---|---|---|
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| **தொழிற்பாட்டுச் செயற்பாடு களிலிருந்து காசுப்பாய்ச்சல்** | | | | | |
| சாதாரண செயற்பாடுகளிலிருந்து மிகை∴ (பற்றாக்குறை) | | 2,804,799 | | (3,510,686) | |
| **காசல்லாத நகர்வுகள்** | | | | | |
| பிறசீராக்கல்கள் | 24 | 1,362,546 | | 1,743,700 | |
| வரவுச் சீராக்கல்கள் | | | | | |
| மதிப்பிறக்கம் | | 6,546,884 | | 6,514,94 | |
| கடன்தீர்வு செய்தல் | | (7,813,051) | | (5,249,994) | |
| பணிக்கொடைக்கான ஏற்பாடு | | 3,557,939 | | (631,953) | |
| **தொழிற்படு மூலதனத்தில் அதிகரிப்பு∴ குறைவு** | | | | | |
| பெறத்தக்கவைகளில் குறைவு ∴ அதிகரிப்பு | 25 | (6,263,887) | | (982,372) | |
| பிற்போடப்பட்ட வருமானத்தில் அதிகரிப்பு ∴ குறைவு | | (2,139,329) | | 494,280 | |
| கொடுபடத்தக்கவைகளில் அதிகரிப்பு∴ குறைவு | 26 | 1,001,385 | | (1,184,672) | |
| சேர்ந்த செலவுகளில் குறைவு ∴ அதிகரிப்பு | | 1,517,914 | | 929,362 | |
| தொழிற்பாட்டுச் செயற்பாடுகளிலிருந்து காசுப்பாய்ச்சல்கள் | | | 575,200 | | (1,877,341) |
| **முதலீட்டுச் செயற்பாடுகளிலிருந்து காசுப்பாய்ச்சல்** | | | | | |
| பொறித்தொகுதி மற்றும் உபகரணங்களின் கொள்வனவு (அட்டவணை உவும் ஊவும்) | | (8,257,690) | | (1,371,923) | |
| காணிக்கான கொடுப்பனவு (மூலதனம்) | | (7,498,127) | | (179,540) | |
| **முதலீட்டுச் செயற்பாடுகளிலிருந்து தேறிய காசுப்பாய்ச்சல்** | | | (15,755,817) | | (1,551,463) |
| **நிதியளித்தல் செயற்பாடுகளிலிருந்து காசுப்பாய்ச்சல்** | | | | | |
| மூலதன மானியம் | 10 | 4,810,000 | | 1,150,000 | |
| மட்டுப்படுத்தப்பட்ட நிதியங்களில் குறைவு | | 6,174,588 | | 3,161,440 | |
| நிதியளித்தல் செயற்பாடுகளிலிருந்து கிடைத்த தேறிய காசுப்பாய்ச்சல்கள் | | | 10,984,588 | | 4,311,440 |
| காசிலும் காசிற்குச் சமமானவற்றிலும் தேறிய அதிகரிப்பு∴ குறைவு | | | (4,196,029 | | 882,636 |
| காலப்பகுதியின் தொடக்கத்திலிருந்த காசும் காசிற்குச் சமமானவைகளும் | | | 40,469,768 | | 39,587,132 |
| காலப்பகுதியின் முடிவில் காசும் காசிற்குச் சமமானவைகளும் | 27 | | 36,273,739 | | 40,469,768 |

**திரு.எஸ்.சிறிமானே**
**பிரதிப் பொருளாளர்**

## 2013ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட உள்ளகக் கணக்காய்வுச் செயற்பாடுகள் மீதான அறிக்கை

மொறட்டுவ பல்கலைக்கழகத்தின் உள்ளகக்கணக்காய்வு பிரிவினால் மேற்கொள்ளப்பட்ட உள்ளகக் கணக்காய்வுச் செயற்பாடுகள் மீதான சுருக்கமான அறிக்கை –

(01) பல்கலைக்கழக ஏற்பாட்டு நிதியத்தின் 32 பணியாளர்களினதும் 1 பணிக்கொடைக் கொடுப்பனவினதும் நிதியத்தின் முற்கணக்காய்வு.

(02) 193ஆம் இலக்கத்திலிருந்து 315ஆம் இலக்கம் வரையுள்ளவைகளும் 463ஆம் இலக்கத்திலிருந்து 607ஆம் இலக்கம் வரையுள்ளவைகளுமான மீண்டுவருஞ் செலவினக் கொடுப்பனவு உறுதிச் சீட்டுகள் சரிபார்க்கப்பட்டுள்ளன.

(03) கொள்வனவுக் கட்டளைகள் சரிபார்க்கப்பட்டுள்ளன.

| | | | | |
|---|---|---|---|---|
| 0749 | 0804 | 0814 | 0836 | 0885 |
| 0749 | 0815 | 0827 | 0853 | 0890 |
| 0794 | 0806 | 0837 | 0869 | |
| 0795 | 0810 | 0832 | 0870 | |
| 0800 | 0811 | 0833 | 0872 | |
| 0801 | 0813 | 0834 | 0878 | |

(04) 10 பணியாளர்களின் சம்பளப் படிநிலைகளின் வழங்குதலும் வருடாந்த சம்பளவேற்றங்களும் மற்றும் 2013 ஜனவரியிலிருந்து 2013 செப்தெம்பர் வரையுள்ள பல்கலைக்கழக ஏற்பாட்டு நிதியத்தின் அனுப்புகையும் சரிபார்க்கப்பட்டன.

(05) 308 280ஆம் இலக்கக் கணக்கின் வங்கிக் கணக்கிணக்கம் சரிபார்க்கப்பட்டது.

(06) 2013ஆம் ஆண்டில்ன இலக்கம் 01இலிருந்து 50 வரையுள்ள பல்லின முற்பணக் கொடுப்பணவுகள் சரிபார்க்கப்பட்டன.

විගණකාධිපති දෙපාර්තමේන්තුව

கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம்

**AUDITOR GENERAL'S DEPARTMENT**


මගේ අංකය / எனது இல. / My No. } ஈசீ/டி/ஐடீயூஎம்/1/13/22

ඔබේ අංකය / உமது இல. / Your No. }

දිනය / திகதி / Date } 2014 ஒக்டோபர் 31

பணிப்பாளர்,

தொழில்நுட்ப நிறுவகம் - மொறட்டுவை பல்கலைக்கழகம்

**மொறட்டுவை பல்கலைக்கழக தொழில்நுட்ப நிறுவகத்தின் 2013 டிசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீது 2000 ஆம் ஆண்டின் 03 ஆம் இலக்க மொறட்டுவை பல்கலைக்கழக தொழில்நுட்ப நிறுவக சட்டவாக்கத்தின் 20 ஆம் பிரிவு மற்றும் 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக்கழக அதிகாரச் சட்டத்தின் 108(1) ஆம் பிரிவின் பிரகாரமான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை**

---

மொறட்டுவை பல்கலைக்கழக தொழில்நுட்ப நிறுவகத்தின் 2013 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்தினத்தில் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, தேறிய சொத்துக்கள் மாற்றக் கூற்று மற்றும் காசுப் பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கமளிக்கும் தகவல்களது பொழிப்பினை உள்ளடக்கிய 2013 டிசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் அதிகாரச் சட்டத்தின் 18 ஆம் பிரிவின் பிரகாரம் விதிக்கப்பட்டுள்ள 2000 ஆம் ஆண்டின் 03 ஆம் இலக்க மொறட்டுவை பல்கலைக்கழக தொழில்நுட்ப நிறுவக சட்டவாக்கத்தின் 20 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம், எனது பணிப்பின் கீழ், கணக்காய்வு செய்யப்பட்டன. பல்கலைக்கழகங்கள் அதிகாரச்சட்டத்தின் 108(1) ஆம் பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையுடன் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புரைகளும் இவ்வறிக்கையில் காணப்படுகின்றன. பல்கலைக்கழகங்கள் அதிகாரச் சட்டத்தின் 108(2) உப பிரிவின் பிரகாரம் விரிவானதோர் அறிக்கை நிறுவகப் பணிப்பாளருக்கு 2014 ஜுன் 05 திகதியன்று வழங்கப்பட்டது.

## 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

---

இந் நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்கத் தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அல்லாத நிதிக் கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.


අංක 306/72, පොල්දුව පාර, බත්තරමුල්ල, ශ්‍රී ලංකාව, .- இல. 306/72, பொல்துவ வீதி, பத்தரமுல்லை, இலங்கை.- No. 306/72, Polduwa Road, Battaramulla, Sri Lanka

+94-11-2887028-34 +94-11-2887223 oaggov@sltnet.lk www.auditorgeneral.gov.lk

1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

அதி உயர் கணக்காய்வு நிறுவனங்களது சர்வதேச கணக்காய்வு நியமங்களுக்கு (ISSAI 1000 – 1810) இணங்க இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கேற்ப நடைபெறும் கணக்காய்வின் அடிப்படையில் இந் நிதிக்கூற்றுக்கள் மீதான அபிப்பிராயத்தை வெளியிடுவது எனது பொறுப்பாகும்.

1.4 அபிப்பிராய மறுப்பிற்கான அடிப்படை

இவ்வறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் சுட்டிக்காட்டப்பட்டுள்ள விடயங்களது பெறுபேறாக நிதி நிலைமைக் கூற்று, நிதிச் செயலாற்றல் கூற்று, தேறிய சொத்து மாற்றங்கள் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பவற்றில் குறிப்பிடப்பட்ட அல்லது குறிப்பிடப்படாத விடயங்கள் மற்றும் மூலாதாரங்களுக்கு எவ்விதத்திலும் சீராக்கங்கள் மேற்கொள்வதற்கான அவசியம் இருந்ததா என்பதை என்னால் தீர்மானிக்க முடியாதுள்ளது.

2. நிதிசார் கூற்றுக்கள்

2.1 அபிப்பிராய மறுப்பு

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்கள் காரணமாக கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை வழங்குவதற்கு போதிய மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெறுவதற்கு என்னால் இயலாதுள்ளது. இதன் காரணமாக இந் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான அபிப்பிராயத்தை என்னால் தெரிவிக்க முடியாதுள்ளது.

2.2 நிதிசார் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

2.2.1 இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியமங்கள்

இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 08 இற்கு அமைய நிகழத்தக்க பொறுப்புகளை நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்த வேண்டுமாயினும், உடன்படிக்கைகளையும் பிணை முறிகளையும் மீறிய விரிவுரையாளர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 2,476,373 பெறுமதியுடைய நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருக்கவில்லை.

### 2.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வருவம் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) மீளாய்வாண்டு இறுதி தினத்தன்று பதிவழிக்கப்பட்டதும் பெறுமதி பூச்சியமாக உள்ளதும் தற்போது பயன்படுத்தப்படுவதுமான ரூபா 42,256,135 கிரயமுடைய சொத்துக்கள், பொறித்தொகுதி, மற்றும் உபகரணங்கள் என்பன மீள மதிப்பீடு செய்யப்பட்டுக் கணக்கிலிடப்படவில்லை.

(ஆ) மீளாய்வாண்டிற்குரிய ஊழியர் பணிக்கொடைக்கான நிதி ஏற்பாடு ரூபா 3,987,088 தொகையை ஊழியர் ஊதியச் செலவினத்தின் கீழ் காட்டுவதற்குப் பதிலாக பிற செயற்பாட்டுச் செலவினத்தின் கீழ் காட்டப்பட்டிருந்தது.

(இ) 2012 ஆம் ஆண்டிற்கான மோட்டார் வாகனத் தேய்மானமாகிய ரூபா 653,333 கணக்கிலிடப்படவில்லை. அத்துடன் மீளாய்வாண்டிலும் அதனைச் சீராக்குவதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை. இதன் காரணமாக, மீளாய்வாண்டு முடிவிலான மோட்டார் வாகனப் பெறுமதியும் பொது ஒதுக்கக் கணக்கு மீதியும் அத் தொகையால் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தன.

(ஈ) மீளாய்வாண்டு ஆரம்பத்தில் முன்கொண்டு வரப்பட்ட 2 ஆண்டுகளுக்கு மேற்பட்ட நூலக மற்றும் ஆய்வுகூட வைப்பாகிய ரூபா 542,650 நிறுவகத்தின் வருவாயாகச் சீராக்கல் செய்யப்படுவதற்குப் பதிலாக, நிதிப் பிரமாணங்களுக்கு இனங்காதவாறு, அபிவிருத்தி நிதியக் கணக்கிற்கு மாற்றப்பட்டிருந்தது.

(உ) மீளாய்வாண்டின் போது மாணவர்களிடமிருந்து பெறப்பட்ட ஆய்வு கூட மற்றும் நூலக வைப்பாகிய ரூபா 481,500 கொடுப்பனவு செய்ய வேண்டிய கணக்கின் கீழ் காட்டுவதற்குப் பதிலாக நூலக மற்றும் ஆய்வுகூட வைப்பாக புதிய நிதியக் கணக்கு ஒன்றில் பதிவு செய்யப்பட்டிருந்தது.

(ஊ) தேசிய தொழில்நுட்ப டிப்ளோமா பழைய மாணவர் அமைப்பு மூலம் 2010 ஆம் ஆண்டில் நன்கொடையாக வழங்கிய தொகையில் எஞ்சியிருந்த ரூபா 118,286 நன்கொடையாகக் காட்டப்படுவதற்குப் பதிலாக கொடுப்பனவு செய்ய வேண்டிய கணக்கின் கீழ் காட்டப்பட்டிருந்தது.

### 2.2.3 பெற வேண்டிய மற்றும் கொடுப்பனவு செய்ய வேண்டிய கணக்குகள்

சேவையிலிருந்து விலகிய 2 உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 98,940 ஊழியர் கடனை மீள் அறவீடு செய்வதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.2.4 கணக்காய்விற்கான சான்றுகளின்மை

கல்விசார் பதவியணியின் வருகை, வெளியேறல் தொடர்பான குறிப்புகள் சமர்ப்பிக்கப்படாமையால், கல்விசார் பதவியணியினரது மீளாய்வாண்டிற்கான ரூபா 37,625,690 ஊதியத்தை உறுதி செய்ய முடியாதிருந்ததுடன் விரிவுரையாளரது விரிவுரைக்கான மணித்தியாலங்களை உறுதி செய்வதற்கான மாணாக்கரது வருகையைக் குறிப்பிடும் பதிவேடும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட முடியாது போனமையால் அவ்விடயத்தைத் திருப்திகரமாகச் சான்றுறுதி செய்யமுடியவில்லை.

### 2.2.5 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றிக்கான தொடர்பு | இணங்காமை |
|---|---|---|
| (அ) | பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு மற்றும் உயர் கல்வி நிறுவனங்களுக்கான தாபன விதிக்கோவையின் XX அத்தியாயத்தினது 3.1 ஆம் பிரிவு | சகல உயர் கல்வி நிறுவனங்களிலும் பணியாற்றும் சகல உத்தியோகத்தரினதும் வருகை மற்றும் வெளியேறல் என்பவற்றை பதிவேடு ஒன்றில் குறிப்பிட வேண்டுமாயினும், கல்விசார் பதவியணியினர் அதன் பிரகாரம் செய்திருக்கவில்லை. |
| (ஆ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணங்கள்<br>(i) நிதிப் பிரமாணம் 396(ஈ) | வழங்கப்பட்டு 6 மாதங்களுக்குள் தேறாதிருக்கும் ரூபா 115,990 பெறுமதியான 25 காசோலைகள் சம்பந்தமாக நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படவில்லை. |

| | |
|---|---|
| (ii) நிதிப் பிரமாணம் 570 | காலங்கடந்த வைப்புக்களை அரசிறையில் சேர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டிய போதிலும் 3 ஆண்டுகளுக்கு மேற்பட்டிருந்த ரூபா 42,250 பெறுமதியான கேள்வி வைப்புக்களுக்கு நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை. |
| (இ) 1997 பெப்பரவரி 03 ஆந் திகதிய 07/97 ஆம் இலக்க பொது நிர்வாகச் சுற்றறிக்கை மற்றும் 1997 ஏப்ரல் 01 ஆந் திகதிய 707 ஆம் இலக்க பல்கழைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவினது சுற்றறிக்கையும் 2013 ஒக்டோபர் 07 ஆந் திகதிய 21/2013 ஆம் இலக்க பொது நிர்வாகச் சுற்றறிக்கையும் | மொறட்டுவைப் பல்கழைக்கழகத்தில் சேவைபுரிந்த 2 உத்தியோகத்தர்கள் குறிப்பிட்டதொரு மாதத்தில் மொறட்டுவைப் பல்கலைக்கழகத்தில் விடுமுறை தினங்களில் பணியாற்றி அதற்கான விடுமுறை தினக்கொடுப்பனவுகளைப் பெற்றிருந்ததுடன், அதே மாதத்தில் வேறு தினங்களில் குறிப்பிடப்பட்ட எல்லையை விஞ்சி தொழில்நுட்ப நிறுவகத்திலும் 01 முதல் 07 நாட்கள் பணியாற்றியதன் மூலம் விடுமுறை தினக் கொடுப்பனவாக ரூபா 20,992 தொகை பெற்றிருந்தனர். |

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், மீளாய்வாண்டின் போது நிறுவகத்தின் செயற்பாட்டு நடவடிக்கைகளால் பெறப்பட்ட மிகை ரூபா 2,804,799 ஆக இருந்ததுடன், முன்னைய ஆண்டில் அது ரூபா 3,510,686 பற்றாக்குறையாக அமைந்தது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

கடந்த 5 ஆண்டுகளின் போது நிறுவகத்திற்கு சேர்த்துக்கொள்ளப்பட்ட மாணாக்கர், கல்வி கற்ற மாணாக்கர் மற்றும் வெளியேறிய டிப்ளோமாதாரிகளது எண்ணிக்கையும் வருடாந்தம் செலவான வருவாய்ச் செலவினத் தொகையினது விபரமும் கீழே காணப்படுகின்றன.

| | 2009 | 2010 | 2011 | 2012 | 2013 |
|---|---|---|---|---|---|
| மொத்த மாணவர்கள் எண்ணிக்கை | 987 | 987 | 1016 | 1043 | 1037 |
| ஆட்சேர்ப்பு | 360 | 360 | 358 | 352 | 347 |
| இறுதி ஆண்டில் நிறுவகத்திற்கு வெளியே பயிற்சி பெறுவதால் அவ்வாறாக நிறுவகத்திற்கு வெளியே இருந்த மாணாக்கரின் எண்ணிக்கை | 295 | 310 | 329 | 347 | 344 |
| நிறுவகத்தில் கல்வி கற்ற மொத்த மாணாக்கர் | 692 | 677 | 687 | 696 | 693 |
| டிப்ளோமாதாரிகள் | 336 | 299 | 296 | 289 | 315 |
| வருடாந்த மீண்டுவரும் செலவினம் ரூபா | 78,644,210 | 83,482,537 | 90,462,255 | 99,252,520 | 121,024,043 |
| ஒரு மாணவரது செலவினம் ரூபா | 113,648 | 123,312 | 131,671 | 142,604 | 174,638 |
| மஹாபொல பெறும் மாணாக்கரது எண்ணிக்கை | 206 | 204 | 208 | 210 | 210 |
| மாணவர் உதவிப்பணம் பெறும் மாணவர்களது எண்ணிக்கை | 451 | 494 | 499 | 475 | 441 |

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நிறுவகத்தினால் 09 டிப்ளோமா கற்கை நெறிகளை நடாத்தப்படுவதுடன். 2009 ஆம் ஆண்டில் டிப்ளோமாவிற்குச் சேர்த்துக்கொள்ளப்பட்ட 360 மாணவர்களில் 2013 ஆம் ஆண்டின் போது டிப்ளோமா சித்தியடைந்த மாணவர்கள் 315 அல்லது 88 சதவீதமாகும்.

(ஆ) தொழில்நுட்ப நிறுவகம் ஆரம்பிக்கப்பட்ட 2000 ஆம் ஆண்டின் போது 350 மாணாக்கர் சேர்த்துக் கொள்ளப்பட்டு இருந்ததுடன் 2013 ஆம் ஆண்டின் போது 347 மாணவர்கள் சேர்த்துக்கொள்ளப்பட்டிருந்தனர் இதன் பிரகாரம் நிறுவகம் ஆரம்பிக்கப்பட்டு 13 ஆண்டுகள் கழிந்து இருந்த போதும் சேர்த்துக் கொள்ளப்படும் எண்ணிக்கையில் முன்னேற்றம் காணப்படவில்லை என்பது அவதானிக்கப்பட்டது.

## 4.2 முகாமைத்துவ விணைத்திறமையின்மை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) 2009 மற்றம் 2010 ஆம் ஆண்டுகளில் தொலைக் கல்வி நவீனமயப்படுத்தல் செயற்திட்டத்திற்காகப் பெறப்பட்ட ரூபா 1,618,050 தொன்களை இலக்கிடப்பட்ட செயற்பாட்டை நிறைவேற்றாமல் வேறு நிதியமாக நிதி நிலைமைக் கூற்றில் காட்டப்பட்டிருந்தது.

(ஆ) 2010 ஜுலை மாத்தில் ஆரம்பிக்கப்பட்ட பொலிமர் குறுகிய கால கற்கைநெறி 10 மாதத்தில் நிறைவு செய்ய வேண்டுமாயினும், அது நிறைவடைய 23 மாதங்களாகின இதன் காரணமாக, மாணவர்கள் நம்பிக்கையிழந்தமையால் மீளாய்வாண்டின் போது ரூபா 84,336 செலவு செய்து பொலிமர் கற்கை நெறியை ஆரம்பிப்பது தொடர்பாக புதினப் பத்திரிகை விளம்பரங்கள் பிரசுரிக்கப்பட்ட போதும், இதுவரையில் எந்தவொரு மாணவரையும் ஆட்சேர்த்துக்கொள்வதற்கு நிறுவனத்தால் இயலாது போயிற்று.

## 4.3 நிதியத்தின் குறைவான பயன்பாடு

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) மாணவர்களுக்குப் புலமைப்பரிசில் வழங்குவதற்கெனத் தனியார் கம்பனியொன்றிடமிருந்து கிடைத்த புலமைப் பரிசில் நிதியத்திற்குப் முன்னைய ஆண்டுகளில் வழங்கப்பட்ட ரூபா 113,971 தொகையான மானியம் மீளாய்வாண்டின் போது பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) வெளி நடவடிக்கைகளுக்காகப் பெறப்பட்ட ரூபா 7,970,715 நிதியத்திலிருந்து மீளாய்வாண்டின் போது எவ்வித செயற்பாட்டிற்கும் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

## 4.4 பதவியணியினர் நிர்வாகம்

2013 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான நிறுவகத்தின் அங்கீகரிக்கப்பட்ட மற்றும் உள்ளவாறான பதவியணியினர் விபரம் கீழே காணப்படுகின்றது.

### (அ) கல்விசார் பதவியணியினர்

| | | அங்கீகரிக்கப்பட்ட எண்ணிக்கை | உள்ளபடியான் எண்ணிக்கை | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (i) | விரிவுரையாளர்கள் | 27 | 18 | 09 |
| (ii) | பயிலுநர் விரிவுரையாளர் | 17 | 13 | 04 |
| (iii) | பொறியியல், விஞ்ஞான ஆசிரிய உதவியாளர்கள் | 15 | 02 | 13 |
| | மொத்தம் | 59 | 33 | 26 |

### (ஆ) ஏனைய பதவியணியினர்

| | | அங்கீகரிக்கப்பட்ட எண்ணிக்கை | உள்ளபடியான எண்ணிக்கை | வெற்றிட எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (i) | நிறைவேற்றுநர் | 05 | 05 | - |
| (ii) | நிறைவேற்று தரம் அல்லாதோர் | 29 | 16 | 13 |
| | மொத்தம் | 34 | 21 | 13 |

கல்விசார் பதவியணியில் விரிவுரையாளர்களுக்கான பதவிகளில் 33 சதவீதமும் பயிலுநர் விரிவுரையாளர் பதவிகளில் 23 சதவீதமும், பொறியியல், விஞ்ஞான ஆசிரிய உதவியாளர் பதவிகளில் 86 சதவீதமும் வெற்றிடமாக இருந்தன.

## 5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 5.1 கூட்டிணைந்த திட்டம்

2011/2015 காலப்பகுதிக்காக கூட்டிணைந்த திட்டம் தயாரிக்கப்பட்டிருந்த போதும், அதற்கான முகாமைத்துவச் சபையின் அங்கீகாரம் இதுவரை பெறப்படவில்லை.

### 5.2 செயல் நடவடிக்கைத் திட்டம்

2003 ஜுன் 02 ஆந் திகதிய பீஈடி/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 5.1 பந்தியின் பிரகாரம், சகல நிறுவனங்களும் செயல் நடவடிக்கைத் திட்டத்தைத் தயாரிக்க வேண்டிய போதிலும் 2011 ஆம் ஆண்டிலிருந்து இது வரை செயல் நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்படவில்லை.

## 6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின்போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுக் குறைபாடுகள் அவ்வப்போது பணிப்பாளரது கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டன. கீழே குறிப்பிடப்பட்ட கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பில் விசேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) உப பதிவேடு
(இ) ஊழியர் கடன்
(ஈ) பெற வேண்டிய கணக்குகளும் செலுத்த வேண்டிய கணக்குகளும்
(உ) பாதீடு
(ஊ) சொத்துக் கட்டுப்பாடு
(எ) உள்ளகக் கணக்காய்வு
(ஏ) முற்பணம்

எச்.ஏ.எஸ். சமரவீர
கணக்காய்வாளர் தலைமை அதிபதி

*K/Y*

| கணக்காய்வு அபிப்பிராயம் | விவரணம் ∴ எடுக்கப்பட்ட நடவடிக்கை |
|---|---|
| 2.2. நிதிக்கூற்றுகள் மீதான கருத்துரைகள் | 2.2. நிதிக்கூற்றுகள் மீதான கருத்துரைகள் |
| 2.2.1. இலங்கை அரசாங்க துறைக்கணக்கீட்டு நியமங்கள் | 2.2.1. இலங்கை அரசாங்க துறைக் கணக்கீட்டு நியமங்கள் |
| இலங்கை அரசாங்க துறைக்கணக்கீட்டு நியமம் 08இன் நியதிகளின் பிரகாரம் எதிர்பாராத சொத்துகளும் நிதிக்கூற்றுகளில் தெரிவிக்கப்பட வேண்டுமென்ற போதிலும் உடன்படிக்கைகளையும் முறிகளையும் மீறிய விரிவுரையாளரொருவரிடமிருந்து அறவிடத்தக்க 2,476,373 ரூபாவைக் கொண்ட தொகை நிதிக்கூற்றுகளில் காண்பிக்கப்படவில்லை. | டபிள்யு. ஏ. இந்திராவின் உடன்படிக்கையுடம் முறிப்பெறுமதியும் சட்ட ஆலோசனையைப் பெறுவதற்காக அனுப்பப்பட்டுள்ளதன் காரணமாக அந்த உடன்படிக்கையினதும் முறிப்பெறுமதியினதும் பெறுமதியாகிய 2476,373 ரூபா நிதிக்கூற்றுகளில் காண்பிக்கப்படவில்லை எனினும் சம்பந்தப்பட்ட உத்தியோகத்தர்களுக்கு எதிர்காலத்தில் அத்தகைய குறைபாடுகளைத் தவிர்த்துக்கொள்ளுமாறு அறிவுறுத்துரைகள் வழங்கப்பட்டுள்ளன. |
| 2.2.2. கணக்கீட்டுக் குறைபாடுகள் | 2.2.2. கணக்கீட்டுக் குறைபாடுகள் |
| பின்வரும் அவதானிப்புரைகள் செய்யப்படுகின்றன.<br>(அ) மீளாய்வாண்டின் முடிவில் பூச்சிய எழுத்திலான பெறுமதியுடனான 42,256,135 ரூபா செலவிலானவைக்கும் தற்போது பயன்படுத்தப் பட்டுக்கொண்டிருக்கின்றவைகளுமான சொத்தும் பொறித்தொகுதியும் உபகரணங்களும் மீள் மதிப்பீடு செய்யப்பட்டு கணக்கிற்கு கொண்டு வரப்படவில்லை. | (அ) சொத்துச் செலவினதும் உபகரணங்களினதும் மீள் மதிப்பீட்டுத் திணைக்களத்தின் கொழும்பு மாவட்டத்தின் பிரதான விலை மதிப்பீட்டாளருடன் கலந்துரையாடல்கள் நடாத்தப்பட்டுள்ளன. மீள் மதிப்பீடு செய்யப்பட்டுள்ள செலவுகள் 2014ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்களிலுள்ள கணக்குகளுடன் சீராக்கல் செய்யப்படும். |
| (ஆ) 3,987,088 ரூபாவைக் கொண்ட மீளாய்வாண்டின் தொடர்பிலான பணியாளர்கள் பணிக்கொடை ஏற்பாடு பணியாளர்களின் ஊதியம் மீதான செலவினத்தை காண்பிக்கப்படுவதற்குப் பதிலாக பிறதொழிற்பாட்டுச் செலவினத்தின் கீழ் காண்பிக்கப்பட்டுள்ளது. | (ஆ) பணியாளர்களின் கூலிகள் கணக்கின் கீழ் பணிக்கொடைக்கான ஏற்பாட்டின் கீழ் காண்பிக்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |
| (இ) 653,333 ரூபாவைக் கொண்ட 2012ஆம் ஆண்டிற்கான மோட்டார் வாகன மதிப்பிறக்கம் கணக்கிற்கு கொண்டுவரப்படவில்லை என்பதுடன் மீளாய்வாண்டிலும்கூட அதை திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை. இந்நிலையில் மீளாய்வாண்டின் முடிவில் மோட்டார் வாகனங்களின் பெறுமதியும் பொது ஒதுக்கக் கணக்கின் மீதியும் இத்தொகையினால் மிகைத்துக் கூறப்பட்டுள்ளது. | (இ) மோட்டார் வாகனங்களின் மதிப்பிறக்கப் பெறுமதியாகிய 653,333∴-ரூபாவிற்கு கணக்குக் காட்டுவதற்கு 2014ஆம் ஆண்டின் 62ஆம் 63ஆம் ஏட்டுப்பதிவுகள் மூலம் ஏற்கனவே கணக்குகளுக்கு இடையில் சீராக்கல்கள் செய்யப்பட்டுள்ளன. |
| (ஈ) மீளாய்வாண்டின் தொடக்கத்தில் முன்னுக்கு கொண்டு வரப்பட்ட 542,650∴-ரூபாவைக் கொண்ட 02ஆண்டுகளுக்கும் மேற்பட்ட பழைமையான பரிசோதனைக்கூட மற்றும் நூல் நிலைய வைப்புகள் வருமானத்திற்கு சீராக்கப்படுவதற்குப் பதிலாக நிதி ஒழுங்குவிதிகளுக்கு முரணாக அபிவிருத்தி நிதியக் கணக்கிற்கு மாற்றப்பட்டுள்ளது. | (ஈ) 542,650∴-ரூபாவைக் கொண்ட நூல் நிலைய மற்றும் பரிசோதனைக் கூட வைப்புகள் ஏற்கனவே இந்த நிறுவகத்தின் வருமானத்திற்கு வரவு வைக்கப்பட்டுள்ளது. |
| (உ) மீளாய்வாண்டில் மாணவர்களிடமிருந்து பெற்றுக் கொள்ளப்பட்ட 481500∴-ரூபாவைக் கொண்ட பரிசோதனைக் கூட மற்றும் நூல் நிலைய வைப்புகள் கொடுபடத்தக்க கணக்கின் கீழ் காண்பிக்கப்படுவதற்குப் பதிலாக நூல் நிலைய மற்றும் பரிசோதனைக் கூட வைப்புகளாக புதிய நிதியக் கணக்கொன்றின் கீழ் காண்பிக்கப்பட்டுள்ளது. | (உ) மாணவர்களினால் செய்யப்படும் பரிசோதனைக்கூட மற்றும் நூல் நிலைய வைப்புகள் அவர்களுடைய கற்கை நெறிகள் வெற்றிகரமாக பூர்த்தி செய்யப்பட்டதன் பின்னரும் அவர்களுடைய கோரிக்கையின் பேரிலும் மட்டுமே அவர்களுக்கு திருப்பிக் கொடுக்கப்படும். அதுவரை அத்தகைய வைப்புகள் முதலீட்டு நிதியக் கணக்கில் வைப்புகளாகக் காண்பிக்கப்படும். அதன் பின்னர் மாணவர்களுக்கு இந்த வைப்புகளை கொடுப்பனவு செய்வதற்கான முறையியலொன்று அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. |
| (ஊ) நன்கொடைகளாகக் காண்பிக்கப்படுவ தற்குப் பதிலாக தொழினுட்பவியலில் தேசிய டிப்புளோமா பட்டம் பெற்ற பழைய மாணவர்களின் சங்கத்தினால் 2010ஆம் ஆண்டில் வழங்கப்பட்ட நன்கொடையில் எஞ்சியிருக்கின்ற 118,286∴-ரூபாவைக் கொண்ட மீதி கொடுபடத்தக்க கணக்குகளின் கீழ் காண்பிக்கப்பட்டுள்ளது. | (ஊ) பேரூந்து ஒன்றைக் கொள்வனவு செய்வதற்காக 2010ஆம் ஆண்டில் வழங்கப்பட்ட நன்கொடையில் எஞ்சியுள்ள 118,286∴- ரூபாவைக் கொண்ட மீதி 2013ஆம் ஆண்டின் நிதிக் கூற்றுகளில் நன்கொடைகளின் கீழ் காண்பிக்கப்பட்டுள்ளது. |

| கணக்காய்வு அபிப்பிராயம் | விவரணம் ∴ எடுக்கப்பட்ட நடவடிக்கை |
|---|---|
| 2.2.3.பெறத்தக்க மற்றும் கொடுபடத்தக்க கணக்குகள் | 2.2. நிதிக்கூற்றுகள் மீதான கருத்துரைகள் |
| சேவையிலிருந்து விலகிய 02 உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடத்தக்க 98,940∴-ரூபாவைக் கொண்ட பதவியினர்களின் கடன்கள் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | சேவையிலிருந்து விலகிய இரண்டு உத்தியோகத்தர்களிடமிருந்து 98,940∴-ரூபாவை அறவிடுவதற்கு எடுக்கப்பட்ட நடவடிக்கை கீழே தரப்படுகின்றது:-<br><br>திரு டபிள்யு. ஏ. இந்திரா - இந்த நிறுவகத்திற்குச் செலுத்தப்பட வேண்டிய ஆனால் இதுவரை இவர் மொறட்டுவ பல்கலைக்கழகத்தின் தகவல் தொழினுட்பவியல் நிறுவகத்திற்கு செலுத்தத் தவறிய தொகையாகிய இடர்பாட்டுக் கடன் மீதியாகிய 38,080∴-ரூபாவைக் கொண்ட தொகை பெறுமதி முறிகளின் கீழ் காண்பிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பில் ஐவுருஆ ∴ யுஊஐ ∴ ீகு ∴ 10 ஆம் இலக்கத்தைக் கொண்டது. எனது கடிதத்தின் மூலம் இரண்டாவது நினைவூட்டல் அவருக்கு அனுப்பப் பட்டள்ளது.<br><br>இந்நிறுவகத்திற்கு இத்தொகையை உடனடியாக அனுப்புமாறு கோரி 2014.06.03 ஆந் திகதியிடப்பட்டதும் யுஊஐ ∴ ீகு ∴ 10 ஆம் இலக்கத்தைக் கடிதம் அவருக்கு அனுப்பப்பட்டுள்ளது.<br><br>திருமதி. எம்.டி.சி.எஸ்.கே. அம்பேபிட்டிய - இவருடைய ஏற்பாட்டு நிதியத்தை இவருக்கு வழங்கும் போது 4,080∴-ரூபாவைக் கொண்ட இடர்பாட்டுக் கடனை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். 2014.08.26ஆந் திகதியன்று இயைபுள்ள பத்திரங்கள் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவிற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. |
| 2.2.4. கணக்காய்வுச் சான்று இல்லாமை | 2.2.4. கணக்காய்வில் போதாத அளவிலுள்ள சான்றுகள் |
| கல்விப்பதவியினர்களின் வருகை மற்றும் செல்லுகை நேரங்கள் பற்றிய பதிவேடுகள் சமர்ப்பிக்கத் தவறியமை காரணமாக மீளாய்வாண்டிற்கான 37,625,690∴-ரூபாவைக் கொண்ட கல்விப் பதவியினர்களின் ஊதியங்களின் செம்மையை உறுதிப்படுத்தக முடியவில்லை. மாணவர்களின் வரவு இடாப்புகள் விரிவுரையாளர்களினால் நிகழ்த்தப்பட்ட விரிவுரை மணித்தியாலங்களின் செம்மையை நிறுவுவதற்க கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படாததன் காரணமாக இந்த விடயத்தைப் பற்றி திருப்திகரமாக உறுதிப்படுத்த முடியவில்லை. | இவ்வாண்டிற்குள் இந்த நிறுவகத்தின் சகல கல்விசார் பிரிவுகளிலும் நடாத்தப்பட்ட விரிவுரை மணித்தியாலங்களின் எண்ணிக்கையின் செம்மையை உறுதிப்படுத்துவதன் பொருட்டு பின்வரும் ஆவணங்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டன.<br><br>- ஒவ்வொரு பாடத்தினதும் பாடத்திட்டத்திற்கும் அங்கீகரிக்கப்பட்ட விரிவுரை மணித்தியாலங்களின் எண்ணிக்கை.<br>- ஒவ்வொரு பாடத்தினதும் பரீட்சை வினாத்தாள்கள், பரீட்சை வினாப்பத்திரங்களை மீதப்படுத்தல்கள், கருத்துரைகள் மற்றும் பெறுபேறுகளின் பரிசீலனை.<br><br>இத்தொடர்பில் பல்கலைக்கழக முறைமையில் பின்பற்றப்படும் நடைமுறையைப் பின்பற்றுவதற்காக முகாமைத்துவச் சபையின் கருத்துக்களைக் கவனத்திற்கு எடுத்துக்கொண்டு இறுதிப்பரீட்சைக்கு தோற்றுவதற்கான மாணவர்களின் தகுதியை நிருணயிப்பதற்காக உள்ளக ஒழுங்கு விதிகளை நடைமுறைப்படுத்துவதற்கு வசதியளிப்பதற்காக விரிவுரைகளுக்கான விரிவுரையாளர்களின் வருகைகளுக்கான இடாப்புகளை பேணி வைத்திருப்பதற்குத் தீர்மானிக்கப்பட்டது. |
| 2.2.5. சட்டங்கள், விதிகள் ஒழுங்குவிதிகள் மற்றும் முகாமைத்துவத்தில் மாணவர்களைக் கடைப்பிடிக்காமை. | 2.2.5. சட்டங்கள், விதிகள், ஒழுங்கு விதிகள், மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களைக் கடைப்பிடிக்காமை. |
| பின்வரும் அவதானிப்புரைகள் செய்யப்படுகின்றன. | |

| கணக்காய்வு அபிப்பிராயம் | | விவரணம் ∴ எடுக்கப்பட்ட நடவடிக்கை |
|---|---|---|
| **சட்டங்கள் விதிகள், ஒழுங்கு விதிகள் முதலியன தொடர்பிலானவை** | **கடைப்பிடிக்காமை** | |
| (அ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவினதும் உயர்கல்வி நிறுவனங்களினதும் தாபன விதிக்கோவை ஒஓ ஆம் அத்தியாயத் தின் 3.1ஆம் பிரிவு | உயர்கல்வி நிறுவகம் ஒவ்வொன்றினதும் சேவையிலுள்ள உத்தியோகத்தர் ஒவ்வொருவரும் வரவுப் பதிவேட்டில் வருகை, செல்கை நேரங்களை பதிவு செய்ய வேண்டும் என்ற போதிலும் கல்விசார் பதிவியினர்கள் இதற்கமைவாக நடவடிக்கை எடுக்கவில்லை. | (அ) முழுமையான பல்கலைக்கழக முறைமையிலும் பயன்படுத்தப்படும் முறையியல் தொழினுட்ப நிறுவகத்திற்கும் இயைபுள்ளதாகும் இத்தொடர்பில் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் அறிவுறுத்துரைகளுக்கு அமைவாக நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |
| (ஆ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதி ஒழுங்குவிதிகள் | | |
| (i) நிதி ஒழுங்கு விதி 396 (ஈ) | வழங்கப்பட்டவைகளும் ஆனால் கொடுப்பனவைப் பெறுவதற்காக 6 மாதங்களுக்கு மேற்பட்ட காலப்பகுதி வரை சமர்ப்பிக்கப்படாதவைகளும் 115,990∴-ரூபாவாக மதிப்பிடப்பட்டவைகளுமான 25 காசோலைகளின் மீது நிதி ஒழுங்கு விதியின் நியதிகளின் படி நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | (ஆ) (ை) 396 (ஈ) (ைை) ஆம் நிதி ஒழுங்குவிதியின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |
| (ைை) நிதி ஒழுங்கு விதி 570 | காலம் கடந்த வைப்புகளை வருமானத்தை திருப்பி எழுதுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வேண்டும் என்ற போதிலும் கூட 42,250∴-ரூபாவைக் கொண்ட 03ஆண்டுக் காலத்திற்கும் மேற்பட்ட பழைமையான கேள்வி கேட்டல்களை வைப்புகள் மீது நிதி ஒழுங்குவிதியின் நியதிகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | (ைை) மூன்று ஆண்டுக் காலப்பகுதியை விஞ்சிய கேள்வி வைப்புகளின் பெறுமதியாகிய 42,250∴-ரூபாவானது 2014ஆம் அண்டின் 82ஆம் இலக்க நாட்குறிப்பு மூலம் இந்நிறுவகத்திற்கு வருமானமாக வரவு வைக்கப்பட்டுள்ளது. |
| (இ) 1997 பெப்ரவரி 03ஆந் திகதியிடப்பட்டதும் 07∴97ஆம் இலக்கத்தைக் கொண்டதுமான அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கையும் 1997 ஏப்ரல் 01ஆந் திகதியிடப்பட்டதும் 707ஆம் இலக்கத்தைக் கொண்டதுமான பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் சுற்றறிக்கையும் 2013 ஒற்றோபர் 07ஆந் திகதியிடப்பட்டதும் 21∴2013ஆம் இலக்கத்தைக் கொண்டதுமான அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கையும் | உயர்கல்வி நிறுவகம் ஒவ்வொன்றினதும் சேவையிலுள்ள உத்தியோகத்தர் ஒவ்வொருவரும் வரவுப் பதிவேட்டில் வருகை, செல்கை நேரங்களை பதிவு செய்ய வேண்டும் என்ற போதிலும் கல்விசார் பதிவியினர்கள் இதற்கமைவாக நடவடிக்கை எடுக்கவில்லை. | (இ) தொழினுட்பவியல் நிறுவகத்தில் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவானது இல்லாமலிருப்பதன் நிமித்தம் இந்த நிறுவகத்தின் உள்ளகக் கணக்காய்வு வேலை மொறட்டுவ பல்கலைக்கழகத்தின் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவினால் செய்யப்படுகின்றது. ஆனால் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு போதிய எண்ணிக்கையில் பதவியினர்களைக் கொண்டிராத காரணத்தினால் இந்த வேலையானது இந்நிறுவகத்தின் பணிப்பாளரின் அங்கீகாரம் பெறப்படுவதற்கு உட்பட்டு பல்கலைக்கழகத்தின் பிரதி உள்ளகக் கணக்காய்வாரினால் விடுமுறை நாட்களில் செய்யப்படுகின்றது. |

| கணக்காய்வு அபிப்பிராயம் | விவரணம் ∴ எடுக்கப்பட்ட நடவடிக்கை |
|---|---|
| | இந்நிறுவகத்தின் பணிப்பாளரின் அங்கீகாரம் பெறப்படுவதற்கு உட்பட்டு விடுமுறை நாட்களில் மொறட்டுவ பல்கலைக்கழகத்தின் உதவிச் சட்ட மற்றும் ஆவணப்படுத்தல் பதிவாளரின் சேவைகள் பெறப்பட்டுள்ளன. |
| 3. நிதி மீளாய்வு | 3. நிதி மீளாய்வு |
| 3.1. நிதிப் பெறுபேறுகள் | 3.1. நிதிப் பெறுபேறுகள் |
| சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக் கூற்றுகளின் பிரகாரம் மீளாய்வாண்டில் இந்த நிறுவகத்தின் தொழிற்பாடுகள் 2,804,799.∴-ரூபாவைக் கொண்ட மிகையை விளைவித்துள்ளது. முந்திய ஆண்டில் இந்நிறுவகத்தின் தொழிற்பாடுகள் 3,510,686.∴-ரூபா பற்றாக்குறையை ஏற்படுத்தியுள்ளது. | ஒத்துக்கொள்ளப்பட்டுள்ளது. |
| 4. தொழிற்பாட்டு மீளாய்வு | 4. தொழிற்பாட்டு மீளாய்வு |
| 4.1. செயலாற்றுகை | 4.1. செயலாற்றுகை |

**கணக்காய்வு அபிப்பிராயம்:**

இந்த நிறுவகத்தினால் கடந்த 05 ஆண்டுகளில் சேர்த்துக் கொள்ளப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கையும் கல்வியை தொடர்ந்து கற்றுக் கொண்டிருந்த மாணவர்களின் எண்ணிக்கையும் டிப்புளோமா பட்டத்தைப் பெற்றுக்கொண்டு வெளியேறிய எண்ணிக்கையும் வருடாந்த செலவினமும் பற்றிய விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| | 2009 | 2010 | 2011 | 2012 | 2013 |
|---|---|---|---|---|---|
| மாணவர்களின் மொத்த எண்ணிக்கை | 987 | 987 | 1016 | 1043 | 1037 |
| சேர்க்கைகள் | 360 | 360 | 358 | 352 | 347 |
| இறுதி ஆண்டில் வெளிவாரிப் பயிற்சி பெற்றுக் கொண்டிருப்பதன் காரணமாக இந்த நிறுவகத்திற்கு வெளியேயுள்ள மாணவர்களின் எண்ணிக்கை | 295 | 310 | 329 | 347 | 344 |
| இந்நிறுவகத்தில் கற்றுக் கொண்டிருக்கும் மாணவர்களின் மொத்த எண்ணிக்கை | 692 | 677 | 687 | 696 | 693 |
| டிப்புளோமா பட்டம் பெற்றவர்கள் | 336 | 299 | 296 | 289 | 315 |
| வருடாந்த வருமானம் ரூபா | 78,644,210 | 83,482,537 | 90,462,255 | 99,252,520 | 121,024,043 |
| மாணவர் ஒருவரின் செலவு ரூபா | 113,648 | 123,312 | 131,677 | 142,604 | 174,638 |
| மகாபொல புலமைப் பரிசில் பெற்றுக் கொண்டிருக்கும் மாணவர்களின் எண்ணிக்கை | 206 | 204 | 208 | 210 | 210 |
| கல்வி மானியங்களின் பெறும் மாணவர்களின் எண்ணிக்கை | 451 | 494 | 499 | 475 | 441 |

பின்வரும் அவதானிப்புரைகள் செய்யப்படுகின்றன.

(அ) இந்த நிறுவகம் 09 டிப்புளோமா கற்கை நெறிகளை நடாத்துகின்றதுடன் 2009ஆம் ஆண்டில் சேர்த்துக் கொள்ளப்பட்ட மாணவர்களில் 2013ஆம் ஆண்டில் டிப்புளோமா பட்டக் கல்வி நெறியில் 315 மாணவர்கள் அதாவது 88 நூற்று வீதமானவர்கள் சித்தியடைந்துள்ளனர்.

**விவரணம் ∴ எடுக்கப்பட்ட நடவடிக்கை:**

(அ) சொந்தக் காரணங்களின் நிமித்தம் சில மாணவர்கள் கற்கை நெறியிலிருந்து விலகிச் சென்றுள்ளனர்.

டிப்புளோமா பட்டம் அளிப்பு வைபவத்தில் கடற்கரையோர பொறியியல் பிரிவைச் சேர்ந்த மாணவர்கள் பயிற்சியைப் பெறுவதற்கும் வேலைபுரிவதற்கும் வெளிநாடுகளுக்குச் செல்லுவதன் நிமித்தம் சில ஆண்டுகளைக் கொண்ட காலப்பகுதிக்கு தாமதிக்கப்படலாம்.

முதலாவது ஆண்டினதும் இரண்டாவது ஆண்டினதும் முடிவில் நடாத்தப்படும் எண்ணிக்கையிலான பாடங்களில் மாணவர்கள் சித்தியடையத் தவறும் போது அவர்கள் அத்தகைய பரீட்சைகளில் சித்தியடையத் தவறியவர்களாகக் கருதப்படுவர். பயிற்சி பெற்றதன் பின்னர் நடாத்தப்படும் பரீட்சைகளிலும் மாணவர்கள் சிலர் சித்தியடையத் தவறுகின்றனர். முதலாவது ஆண்டுப் பரீட்சையிலும் இரண்டாவது ஆண்டுப் பரீட்சையிலும் பயிற்சியிலும் சித்தியடையும் மாணவர்கள் மாத்திரமே டிப்புளோமா பட்டத்தைப் பெறுவதற்கு தகுதியுடையவராவர்.

| கணக்காய்வு அபிப்பிராயம் | விவரணம் ∴ எடுக்கப்பட்ட நடவடிக்கை |
|---|---|
| (ஆ) இந்த நிறுவகம் நிறுவப்பட்ட 2000ஆம் ஆண்டில் சேர்த்துக்கொள்ளப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கை 350ஆகவிருந்த வேளையில் 2013ஆம் ஆண்டில் 347 மாணவர்கள் சேர்த்துக் கொள்ளப்பட்டனர். இந்த நிறுவகம் தாபிக்கப்பட்டு 13 ஆண்டுகள் முடிவடைந்துள்ள போதிலும் சேர்க்கைகளில் முன்னேற்றம் ஏற்படவில்லை என்பது அவதானிக்கப்பட்டுள்ளது. | 2000ஆம் ஆண்டில் தொழினுட்பவியல் நிறுவகமானது தாபிக்கப்பட்டுள்ளதுடன் இந்த நிறுவகம் உட்கட்டமைப்பு வசதிகளை பகிர்ந்து கொள்வதற்கு மொறட்டுவ பல்கலைக்கழகத்துடன் உடன்படிக்கையொன்றைச் செய்துள்ளதுடன் விதிக்கப்பட்டுள்ள மட்டுப்பாடுகளின் விளைவு சேர்க்கப்பட்ட மாணவர்களை 350 என்ற எண்ணிக்கையில் வைத்திருக்க வேண்டிய நிலைமையை ஏற்படுத்தியுள்ளது. எனினும் தியகம மனையிடத்தில் தொழினுட்பவியல் நிறுவகம் தாபிக்கப்பட்டதன் பின்னர் மாணவர்களின் எண்ணிக்கை 1,000 ஆக அதிகரிப்பதற்குக் கருதப்பட்டுள்ளது. |
| 4.2. முகாமைத்துவக் குறைபாடுகள் | 4.2. முகாமைத்துவக் குறைபாடுகள் |
| பின்வரும் அவதானிப்புரைகள் செய்யப்படுகின்றன.<br>(அ) 2009ஆம் ஆண்டிலும் 2010ஆம் ஆண்டிலும் தூரக் கல்வி நவீனமயப்படுத்தல் கருத்திட்டத்திற்காக பெற்றுக்கொள்ளப்பட்ட 1,618,050∴-ரூபாவைக் கொண்ட பணத்தொகை குறிக்கோள் தொடர்பிலான நடவடிக்கைகளை மேற்கொள்ளாமல் நிதி நிலைமைக் கூற்றில் பிற நிதியங்களாகக் காண்பிக்கப்பட்டுள்ளது. | (அ) தூரக் கல்வி நவீனமயப்படுத்தல் நிகழ்ச்சித் திட்டத்திற்கு பதவியினர்களினால் செய்யப்பட்ட உதவு தொகைகள் கொடுப்பனவுகளுக்காக கண்டறியப்படும் வரைக்கும் இந்த நிறுவகத்தினால் பெற்றுக்கொள்ளப்பட்ட 1,618,050∴-ரூபாவைக் கொண்ட பணத்தொகை வைப்பிலிடப்பட்ட நிலையிலிருந்தது. |
| (ஆ) 2010 யூலை மாதத்தில் ஆரம்பிக்கப்பட்ட பொலிமர் பொலிமர் கநற் தவணைக் காலக் கல்வி நெறியானது 10 மாதங்களில் பூர்த்தி செய்யப்பட்டிருக்க வேண்டிய போதிலும் இக்கல்வி நெறியைப் பூர்த்தி செய்து கொள்வதற்கு 23 மாதங்களைக் கொண்ட காலப்பகுதி எடுக்கப்பட்டுள்ளது. மீளாய்வாண்டில் பொலிமர் கல்வி நெறியை ஆரம்பிப்பதற்கு 84,336∴-ரூபா செலவில் பத்திரிகை விளம்பரமொன்று வெளியிடப்பட்ட போதிலும் மேற்போந்த காரணத்தின் நிமித்தம் மாணவர்கள் இந்தக் கல்விநெறியில் நம்பிக்கை இழந்ததன் காரணமாக இந்நிறுவகமானது மாணவர்களைச் சேர்த்துக் கொள்ள முடியவில்லை. | (ஆ) இது பின்வரும் காரணங்களின் நிமித்தம் ஏற்பட்டுள்ளது. பொலிமர் குறுந்தவணைக் காலக் கல்வி நெறியை கூட்டிணைத்த விரிவுரையாளரின் திடீர் சுகவீனம். மற்றையது அதன் பின்னர் இந்த கல்வி நெறியை நடாத்துவதற்கு நியமிக்கப்பட்ட விரிவுரையாளர் இந்நிறுவகத்தை விட்டு விலகி பிறிதொரு பல்கலைக்கழகத்தில் சேர்ந்தமை. இன்னுமொரு காரணம் பரிசோதனைக் கூட வசதிகளைப் பெறுவதில் நிலவிய கஷ்டத்தின் நிமித்தம் 2010 யூலை மாதத்தில் ஆரம்பிக்கப்பட்ட கல்வி நெறியை பூர்த்தி செய்வதற்கு 23 மாதங்களை செலவிட வேண்டியிருந்தமை. இந்நிலைமைகளின் கீழ் மீளாய்வாண்டில் வெளியிடப்பட்ட பத்திரிகை விளம்பரத்திற்கு அனுசரணையாக இந்நெறியில் சேர்ந்து கற்பதற்கு 12 மாணவர்கள் தங்களுடைய விண்ணப்பங்களை சமர்ப்பித்திருந்தனர். ஆனால் இந்நெறியை வெற்றிகரமாக நடாத்துவதற்கு தேவைப்பட்ட மாணவர்களின் ஆகக் குறைந்த எண்ணிக்கை 20 ஆகும். எனவே 2013ஆம் ஆண்டில் இக்கல்வி நெறி ஆரம்பிக்கப்படவில்லை. ஆனால் வருமாண்டுகளில் இந்நெறியை ஆரம்பித்து தொடருவதற்கான சாத்தியத் தகவு பற்றி கவனத்திற் கொள்ளப்படும். |
| 4.3. நிதியங்களின் குறைவாகப் பயன்படுத்துகை | 4.3 நிதியங்களின் குறைவாகப் பயன்படுத்துகை |
| பின்வரும் அவதானிப்புரைகள் செய்யப்படுகின்றன.<br>(அ) மாணவர்களுக்குப் புலமைப் பரிசில் கொடுப்பனவுகள் செய்வதற்காக தனியார் கம்பனியொன்றினால் புலமைப்பரிசில் நிதியத்திற்கு நன்கொடையாகப் பெறப்பட்ட 113,971∴-ரூபாவைக் கொண்ட மானியமொன்று மீளாய்வாண்டில் பயன்படுத்தப்படவில்லை. | (அ) மாணவர்களுக்கு தெரிவிக்கப்பட்டுள்ள தகவுத்திறன்களின் பிரகாரம் 2013ஆம் ஆண்டில் புலமைப் பரிசில் பெறுவதற்கு மாணவர் எவரும் தகுதியுடையவராகவிருக்கவில்லை. எனவே புலமைப்பரிசில்களை வழங்குவதற்கு சி. டபிள்யு. மாக்கி கம்பனியின் நிதியத்தை பயன்படுத்துவதற்கான தேவை எதுவும் இருக்கவில்லை. |
| (ஆ) வெளிவாரி நடவடிக்கைகளுக்காக பெறப்பட்ட 7,970,715 ரூபாவைக் கொண்ட நிதியங்களிலிருந்து மீளாய்வாண்டில் செயற்பாடுகள் எதுவும் மேற்கொள்ளப் படவில்லை. | (ஆ) மேலதிக நடவடிக்கைகளுக்காக இந்த நிதியங்கள் பெற்றுக் கொள்ளப்படவில்லை. துறைமுகங்கள், விமானப் போக்குவரத்து அமைச்சிலிருந்து பொறிமுறைப் பொறியியல் மற்றும் கடற்கரையோர அய்வுகள் துறையின் அபிவிருத்திக்காகப் பெற்றுக்கொள்ளப்பட்ட நிதியங்கள் 2005ஆம் ஆண்டில் 293,66ஆம் இலக்க மொறட்டுவ பல்கலைக்கழக மன்றப் பத்திரத்தினால் தொழினுட்பவியல் நிறுவகத்திற்கு மாற்றப்பட்டது. தியகம மனையிடத்தில் தொழினுட்பவியல் நிறுவகம் நிறுவப்பட்டதன் பின்னர் பிற அபிவிருத்தி வேலைகளுக்குத் தேவையான உபகரணங்களைக் கொள்வனவு செய்வதற்குப் பயன்படுத்துவதற்காக இந்த நிதியங்கள் நிலையான வைப்பொன்றில் வைப்பிலிடப்பட்டுள்ளது. தற்போது முதலீடுகளின் வட்டியிலிருந்து இந்த கல்விப்பிரிவில் சில அபிவிருத்தி வேலைகள் செய்யப்பட்டுக் கொண்டிருக்கின்றன. |

<table>
<tr><td>4.4. ஆளணி நிருவாகம்</td><td>4.4. ஆளணி நிருவாகம்</td></tr>
<tr><td>
அங்கீகரிக்கப்பட்ட பதவியினர்களினதும் 2013 திசெம்பர் 31இல் இருந்தவாறான உள்ளபடியான பதவியினர்களினதும் விவரங்கள் கீழே தரப்பட்டுள்ளது.<br><br>
(அ) கல்விசார் பதவியினர்கள்
<table>
<tr><th></th><th>அங்கீகரிக் கப்பட்ட எண்ணிக் கை</th><th>உள்ளபடி யான எண்ணிக் கை</th><th>வெற்றிடங்க ளின் எண்ணிக்கை க</th></tr>
<tr><td>(i) விரிவுரையார்</td><td>27</td><td>18</td><td>09</td></tr>
<tr><td>(ை) தகுதிகூர்நிலை விரிவுரை யாளர்கள்</td><td>17</td><td>13</td><td>04</td></tr>
<tr><td>(ைை) பொறியியல் கற்பித்தல் உதவியாளர்கள்</td><td>15</td><td>02</td><td>13</td></tr>
<tr><td>மொத்தம்</td><td>59</td><td>33</td><td>26</td></tr>
</table>
<br>
(ஆ) பிறபதவியினர்கள்
<table>
<tr><td>(ை) பதவியினர் தரங்கள்</td><td>05</td><td>05</td><td>-</td></tr>
<tr><td>(ைை) பதவியினரல்லாத தரங்கள்</td><td>29</td><td>16</td><td>13</td></tr>
<tr><td>மொத்தம்</td><td>34</td><td>21</td><td>13</td></tr>
</table>
<br>
விரிவுரையாளர் பதவிகளில் 33 நூற்றுவீத வெற்றிடங்களும் தகுதிகூர் நிலை விரிவுரையாளர் பதவிகளில் 23 நூற்று வீத வெற்றிடங்களும் பொறியியல் விஞ்ஞான கற்பித்தல் உதவியாளர் பதவிகளில் 86 நூற்று வீத வெற்றிடங்களும் நிலவியிருந்தது.
</td><td>
(அ)வும் (ஆ)வும் 2000ஆம் ஆண்டிலிருந்து இந்த நிறுவகத்திற்கும் பல்கலைக்கழகத்திற்குமிடையே வளங்களின் பகிர்வுடன் ஏறத்தாழ 1050 மாணவர்களின் வேலையை தொழினுட்பவியல் நிறுவுகமானது நிருவகித்துக் கொண்டிருந்தது. கடந்த சில ஆண்டுகளில் மொறட்டுவ பல்கலைக்கழகத்தினால் மாணவர்களின் உள்ளெடுப்பில் மேற்கொள்ளப்பட்ட படிப்படியான அதிகரிப்புடன் இந்த நிறுவகத்திற்கு வழங்கப்பட்டுள்ள இடபப்பரப்பும் படிப்படியாகக் குறைந்து கொண்டிருக்கின்றது. இப்பின்னணியில் ஆட்சேர்ப்பு செய்து கொள்ளப்படவுள்ள பதவியினர்களுக்கு இடவசதியும் பிறவசதிகளும் வழங்குவதில் க்‘டம் ஏற்பட்டுள்ளதுடன் வெற்றிடயங்களை நிரப்புவதில் இந்த நிறுவனத்திற்கு தொடர்ச்சியான பிரச்சினை ஏற்பட்டுள்ளது.<br><br>
பல்கலைக்கழக மானியங்க்ள ஆணைக்குழுவினால் பொறியியல் கற்பித்தல் உதவியாளர்கள் ஆட்சேர்ப்புச் செய்யப்படலாகாது என எடுக்கப்பட்டுள்ள தீர்மானத்தின் பிரகாரம் அத்தகைய ஆட்சேர்ப்புச் செய்யப்படவில்லை. எனினும் பொறியியல் கற்பித்தல் உதவியாளர் பதவிகளை விரிவுரையாளர் பதவிகளாக மாற்றுமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.
</td></tr>
<tr><td>5. பொறுப்புக்கூறலும் நல்லாட்சியும்</td><td>5. பொறுப்புக் கூறலும் நல்லாட்சியும்</td></tr>
<tr><td>5.1. கூட்டுத்திட்டம்</td><td>5.1. கூட்டுத்திட்டம்</td></tr>
<tr><td>2011∴2015ஆம் ஆண்டுக் காலப்பகுதிக்காக கூட்டுத்திட்டமொன்று தயாரிக்கப்பட்டுள்ள போதிலும் இற்றை வரைக்கும் இதற்கு முகாமைத்துவச் சபையின் அங்கீகாரம் பெறப்படவில்லை.</td><td>தொழினுட்பவியல் நிறுவகம் 2011இலிருந்து 2015 வரையுள்ள காலப்பகுதிக்கு கூட்டுத்திட்டமொன்றை தொழினுட்பவியல் நிறுவகம் தயாரித்துள்ளது.</td></tr>
</table>

| கணக்காய்வு அபிப்பிராயம் | விவரணம் ∴ எடுக்கப்பட்ட நடவடிக்கை |
|---|---|
| 5.2. செயற்பாட்டுத்திட்டம் | 5.2. செயற்பாட்டுத்திட்டம் |
| 2003 யூன் 12ஆந் திகதியிடப்பட்டதும் ீநுனு∴12 ஆம் இலக்கத்தைக் கொண்டதுமான அரசாங்க தொழில் முயற்சிகள் சுற்றறிக்கையின் 5.1ஆம் பிரிவின் நியதிகளின் பிரகாரம் நிறுவனம் ஒவ்வொன்றும் செயற்பாட்டுத் திட்டமொன்றைத் தயாரிக்க வேண்டுமென்ற போதிலும் கூட இந்த நிறுவகமானது 2011ஆம் ஆண்டிலிருந்து இற்றை வரைக்கும் செயல் திட்டங்களைத் தயாரிக்கவில்லை. | 2011∴2015 வரையுள்ள காலப்பகுதிக்கான கூட்டுத்திட்டத்தின் பிரகாரம் தயாரிக்கப்பட்ட செயற்பாட்டுத் திட்டம் 2014 யூன் 27ஆந் திகதியன்று நடாத்தப்பட்ட முகாமைத்துவச் சபையின் 163வது கூட்டத்தில் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. |
| 6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும் | முறைமைகளும் கட்டுப்பாடுகளும் |
| கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகளிலும் கட்டுபபாடுகளிலுமுள்ள குறைபாடுகள் காலத்துக்குக் காலம் இந்நிறுவகத்தின் பணிப்பாளரின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டுதுறைகளின் தொடர்பில் விசேட கவனம் வேண்டப்படுகின்றது. | |
| (அ) கணக்கீடு | (அ) கணக்குகளின் தயாரித்தல் மொறட்டுவ பல்கலைக்கழகத்தின் தொழினுட்பவியல் நிறுவககத்தின் 2014.12.31இல் முடிவடையும் ஆண்டிற்கான நிதிக்கூற்றுகளைத் தயாரிக்கும் போது 1985ஆம் ஆண்டின் 07ஆம் இலக்க திருத்தப்பட்டவாறான சட்டத்தின் 106(1)ம் 107 (1ஆ) ஆம் இலக்க வாசகங்களும் 2000ஆம் ஆண்டின் 03ஆம் இலக்க தொழினுட்பவியல் நிறுவகத்தின் கட்டளைச் சட்த்தின் 19(ஸ)ஆம் (2)ஆம் இலக்க வாசகங்களும் 1971ஆம் ஆண்டின் 38ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 8 (3) ஆம் 12ஆம் பந்திகளும் பல்கலைக்கழக மானங்கள் ஆணைக்குழுவின் 3∴2014ஆம் இலக்க நிதிச்சுற்று நிருபமும் பட்டயம் பெற்ற கணக்காளர்கள் நிறுவகத்தினால் வெளியிடப்பட்டுள்ள அரசாங்க கணக்கீட்டு நியமங்களும் கணக்கிற்கு எடுத்துக்கொள்ளப்படுமென்பதுடன் அவ்வண்ணம் தயாரிக்கப்பட்ட நிதிக்கூற்றுகள் முகாமைத்துவச் சபையின் அங்கீகாரத்திற்கு உட்பட்டு 2015 பெப்ரவரி 28ஆந் திகதிக்கு முன்னர் கணக்காய்வாளர் நாயகத்திற்குச் சமர்ப்பிக்கப்படும். இந்த நடவடிக்கை முறை 2013ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுகளின் தொடர்பில் பின்பற்றப்பட்டுள்ளது. |
| (ஆ) துணைப்பதிவேடுகள் | (ஆ) துணைப்பதிவேடுகள் |
| (இ) பதவியினர் கடன்கள் | (இ) பதவியினர் கடன்கள் |
| | எமது கட்டுப்பாட்டிற்கு அப்பாற்பட்ட விடயங்களில் தவிர இந்த நிறுவகமானது பதவியினர் கடன்களை வழங்குவதிலும் அவற்றை அறவிடுவதிலும் முறைமையான நிருவாக முறைமையொன்றைப் பின்பற்றுகின்றது. |
| (ஈ)பெறத்தக்க கணக்குகளும் கொடுபடத்தக்க கணக்குகளும் | (ஈ)பெறத்தக்க கணக்குகளும் கொடுபடத்தக்க கணக்குகளும் |
| | 2000ஆம் ஆண்டின் 03ஆம் இலக்க மொறட்டுவ பல்கலைக்கழகத்தின் தொழினுட்பவியல் நிறுவகத்தின் 16ஆம் 17ஆம் 18ஆம் 19ஆம் பந்திகள், மற்கும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் வெளியிடப்பட்டுள்ள அறிவுறுத்துரைகள், அரசாங்க நிதி ஒழுங்குவிதிகள் பட்டயம் பெற்ற கணக்காளர்கள் நிறுவகத்தினால் வெளியிடப்பட்டுள்ள கணக்கீட்டு நியமங்கள் ஆகியவற்றுக்கு அமைவாக நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |
| (உ) வரவு செலவுத்திட்டக் கட்டுப்பாடு | (உ) வரவு செலவுத்திட்டக் கட்டுப்பாடு |
| | வருமான விடயங்களையும் செலவின விடயங்களையும் அடையாளமறிவதற்கு இந்நிறுவகம் ஏற்கனவே ஓர் முறையியலை வைத்திருக்கின்றது. இந்நிறுவகத்தின் தேவைகளுக்கு ஏற்ப செலவின விடயங்கள் பயன்படுத்தப்படும் போது சில மாறுபாடுகள் ஏற்படுகின்றன. ஆனால் அவற்றை ஆகக் குறைப்பதற்கும் கூட நடவடிக்கை எடுக்கப்படும். |
| (ஊ) சொத்துக்களின் கட்டுப்பாடு | (ஊ) சொத்துக்களின் கட்டுப்பாடு |
| | இந்நிறுவகமானது நிறுவகத்திற்குச் சொந்தமான ஆதனங்களை புறம்பாகக் கண்டறிவதற்கான பேரேடுகளை |

| | |
|---|---|
| | ஏற்கனவே வைத்திருக்கின்றது. பயனற்ற சொத்துக்களை கண்டறிவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றது என்பதுடன் இது தொடர்பில் மேலும் நடவடிக்கை எடுக்கப்படும். |
| (எ) உள்ளகக் கணக்காய்வு | (எ)உள்ளகக் கணக்காய்வு |
| | இந்த நிறுவகத்திற்கு புறம்பான உள்ளக கணக்காய்வுப் பிரிவு எதுவுமல்லையென்பதுடன் இந்த நிறுவகத்தின் உள்ளகக் கணக்காய்வு வேலைக்காக மொறட்டுவ பல்கலைக்கழகத்தின் உள்ளக கணக்காய்வு உத்தியோகத்தரின் சேவைகளைப் பெற்றுக்கொள்ள வேண்டியிருந்தது. |
| (ஏ) முற்பணம் | (ஏ) முற்பணம் |
| | முற்பணத் தொகைகளுக்கு எதிராக முன்னோடியாகக் கருதப்பட்ட வேலையின் தன்மையின் நிமித்தம் கொடுப்பனவு செய்யப்பட்ட முற்பணத் தொகைளை இணக்கம் செய்வதில் தாமதமொன்று ஏற்பட்ட போதிலும் சகல முற்பணத் தொகைகளும் மோசடி எதுவுமில்லாமல் தீர்வு செய்யப்பட்டுள்ளன. |